₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 6 | June 2021



நீர் அவனைத் தேவதூதரிலும்
சற்று சிறியவனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும்
அவனை முடிசூட்டினீர்.
(சங்கீதம் 8:5)

பாக்கியம் பெறும் பரேலா இனமக்கள்!

# தேவனின் தேடல்! ஆரம்ப வரிகள்...



கிறிஸ்தவம், இந்த உலகிலுள்ள பிற சமயங்களைவிட தனித்துவமானது; ஏனெனில், இது மனுக்குலம் தெய்வத்தைத் தேடியல்ல, தேவனே மனுக்குலத்தைத் தேடி வந்ததைக் குறிப்பிடுகிறது. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற தேவன், மனிதனைத் தாமாகவே தேடி வந்து, தம்மை வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம். அதாவது, "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன்...நான் காணாமற்போனதைத்தேடி துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்" (எசே.34:11 &16). ஆம், நமது தேவன் மிக உயர்ந்தவராயிருந்தும், வெறும் மண்ணினால் படைக்கப்பட்ட தமது சிருஷ்டியாகிய மனுக்குலத்தை விடாமுயற்சியுடன் தேடி, அவர்களோடு உறவு கொண்டார் என்பது மிகவும் வியப்பும், தனித்துவமும் நிறைந்ததே!

தேவன் மனுக்குலத்தோடு உறவை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஏன் இத்தகைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை நாம் அறிதல் மிகவும் அவசியமாகும். ஏனெனில், மனுக்குலம் தேவனின் சாயல் மட்டுமல்ல (ஆதி.1:27); அவருடைய ஜீவசுவாசம்தான் மனிதனின் உயிர்மூச்சாகவும் (ஆதி.2:7), அவருடைய இரத்தம்தான் மனுக்குலத்தை மீட்டு (அப்.20:28) நித்தியஜீவனை நல்கும் என்பதிலும் தேவன் உறுதி கொண்டிருந்தார். தேவன் தம்முடைய ஜனங்களல்லாதவர்களையும், தம்மைத் தேடாதவர்களையும்கூட தம்மைத் தேடுவதற்கான சித்தம் கொண்டிருந்தார்; அதாவது, "என்னைக்குறித்து விசாரித்துக்கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்'' என்று ஏசாயா தீர்க்கதரிசி (65:1) குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அனைத்து ஜனங்களும் அவரை மகிமைப்படுத்தவும், ஆராதிக்கவும் வேண்டுமென்பதே தேவனின் திருவுளச்சித்தம். இயேசுகிறிஸ்துவும் மனிதனைத் தேடி வந்தது மட்டுமல்லாமல், ஆதாம் ஏவாள் செய்த பாவத்தினிமித்தம் அவர்கள் பிதாவினால் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, அதனால் பிதாவுக்கும் மனுக்குலத்திற்குமிடையே ஏற்பட்ட பிரிவைச் சரிசெய்யும்படியாகவும் தமது ஜீவனையே கொடுத்தார் (லூக்.19:10).

கிறிஸ்தவத்தின் மிக ஆழமான சத்தியம் என்னவென்றால், நாம் தேவனைக் கண்டுக்கொள்ள முயற்சிப்பதற்கு முன்பே, தேவன் நம்மை அதிகமாக நேசித்து தேடி வந்தார் என்பதே. தேவன் நம்மைத் தமது சாயலில் படைத்து, நம்மைத் தேடிவந்ததின் நோக்கமே, நாம் அவரது சாயலை முழுமையாகப் பிரதிபலிக்க வேண்டும் என்பதுதான். இவ்வாறு நம்மீது இரக்கம் கொண்டுள்ள தேவனுக்கு நாம் கைமாறு செய்வதற்கான ஒரே வழி என்னவெனில், அவரை மகிமைப்படுத்துவதும், அவரது மகத்துவத்தை மற்றவர்களுக்குப் பறைசாற்றுவதுமாகும். அனைத்து இனமக்களும் தேவனுக்கு ஆராதனை செய்ய வேண்டுமென்பது தேவசித்தமாக இருப்பதால், அனைத்து இனமக்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது தேவப்பிள்ளைகளின் தலையாயக் கடமையாகும். இக்காலத்தில் தேவன் ஆவியானவராகக் காணப்படுவதால், அவருடைய நற்செய்தியை ஒவ்வொருவருக்கும் நேரிடையாக எடுத்துச்சென்று, அவருக்காய்ப் பேசுகிற வாய்களாகவும், அவருடைய ஊழியத்தைச் செய்கிற கைகள் மற்றும் கால்களாகவும் நாம் பயன்படுத்தப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆகையால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்துவை அறியாத மக்களைத் தேடிச்செல்லுகிற அவருடைய ராஜ தூதுவர்களாகச் செயல்பட வேண்டும். "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" (எபே.2:10). ஆம், "மனிதன் யாரென்று உலகில் யாருக்கும் தெரியாது ... இந்த மனிதர்கள் கூட்டத்தைத் தேடியே செல்வோர் தேவனின் பிரியர்களே!'' என்கிற நமது சகோ. பேட்ரிக் ஜாஷ்வா அவர்களுடைய பாடலின் வரிகள் இதைப் பிரத்தியட்சமாக நமது செவிகளில்இன்றும் ஒலிக்கச் செய்கிறதன்றோ!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"மனிதர்களை நாம் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் மதிப்பிடாமல், அவர்கள் தேவனுடைய சாயலில் காணப்படுவதால், அதன் அடிப்படையில் அவர்களை நேசிக்கவும், கனப்படுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம்."– ஜாண் கால்வின்**

**"தேவன் ஒரு மனிதனைத் தொடும்போது, அவன் தனது சாதாரண நிலையிலிருந்து அசாதாரண நிலையை அடைகிறான். அவனது வாழ்க்கையும் இவ்வுலகில் முக்கியத்துவம் பெறுகிறது. பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் அதனைக் கண்டு, அவனுக்கு ஊழியம் செய்யப் புறப்பட்டு வருகிறார்கள்." – A.W. டோஸர்**

**"மென்மையான பாசத்துடன் அனைத்து இனமக்களையும், குறிப்பாக ஏழ்மையான, பலவீனமான, எந்த அந்தஸ்துமற்ற மக்களை அரவணைத்துக் கொள்ளுங்கள்." – போப் பிரான்சிஸ்**

**நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார். (எரே.1:5)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...



கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

நமது இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் வல்லமையான இணையற்ற நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

கொரோனா தொற்றுநோய் நமது தேசம் முழுவதையும் பேரழிவிற்கு உட்படுத்தியிருக்கிறது. நமது அன்புக்குரியவர்கள் மற்றும் வாழ்வாதாரங்களின் இழப்புகள் தாங்கமுடியாத அளவிற்கு மிகக் கடினமாகக் காணப்படுகின்றன. இந்தத் துன்பம் ஏன் எனது குடும்பத்திற்கு வந்தது? என்று அநேகர் தேவனிடம் பதில் தேடுகிறார்கள். இதே கேள்வியைத்தான் யோபுவும் கேட்டார். இவர் தனது குடும்பம், செல்வம் மற்றும் ஆரோக்கியத்தை இழந்தபோது, தேவனிடத்தில் பல கேள்விகளைக் கேட்டதாக வேதாகமத்தில் (யோபு 9:17 & 22 ) காண்கிறோம். அதாவது யோபு, ''ஆ, என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்; இதோ, சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யவும், என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும் எனக்கு விருப்பமுண்டு'' என்று வினவுவதைப் பார்க்கிறோம் (யோபு 31:35).

ஆனால், தேவன் யோபுவின் கேள்விகளுக்கு நேரடியாக ஏதும் பதிலளிக்கவில்லை. மாறாக, தேவன் தம்முடைய சர்வ வல்லமையையும், சகலத்தின் மீதுள்ள தமது ஆளுமையையும், தமது படைப்பின் மகத்துவத்தையும், மாட்சிமையையும், தம்முடைய ஞானத்தையும், புத்தியையுமே (யோபு 38:2,4) பதிலாகக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

தேவனுடைய பதிலைக் கேட்ட பின் யோபு அளித்தப் பதிலில்தான், தேவனின் மெய்யான சத்தியம் அடங்கியுள்ளதை நாம் அறிந்துக்கொள்ளலாம். அதாவது, தேவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என யோபு அறிந்துக்கொள்கிறார் (யோபு 42:2); மேலும், தனது புத்திக்கு எட்டாததையும், அறியாததையும் பற்றி தான் பேசியதாக யோபு ஒப்புக்கொள்கிறார் (42:3). ஆகையால், தான் தன்னையே அருவருத்து தூளிலும், சாம்பலிலும் இருந்து அதற்காக மனஸ்தாபப்படுவதாகக் கூறுகிறார் (42:6). மேலும், தான் தேவன் மீது முழு விசுவாசத்தை வைப்பதாகவும், தேவன் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் ஒருபோதும் எந்தத் தவறும் செய்யமாட்டார் என்று கூறுவதையும் பார்க்கிறோம். "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் (யோபு 19:25); அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று அவர் கூறியிருப்பதைக் காணலாம்.

## மிஷனெரிகள் மற்றும் ஜெபக்குழுத்தலைவர்களின் இழப்பு:

கடந்த மே மாதம் நான் இதை எழுதும்வரை, நமது இயக்கத்தின் 4 மிஷனெரிகள் மற்றும் சில ஜெபக்குழுத்தலைவர்கள் தங்களது இரட்சகரோடு இருக்கும்படியாக நித்தியத்திற்கு அழைப்புப் பெற்றுச் சென்றுள்ளனர். இது அவர்களது குடும்பங்களுக்கும், நமது FMPB குடும்பத்திற்கும் மிகப்பெரிய இழப்பாகும். "ஆண்டவரே, இந்தக் கொரோனாவோடுகூடிய வாழ்க்கை இனி வேண்டாம்" என்பது நமது இதயப்பூர்வமான ஜெபமாக அமைகிறது. தங்கள் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு, நீதியின் கிரீடத்தைப் பெறவும்,

கண்ணீரும் வேதனையும் இல்லாத இடத்தில் வாழவும் நமக்கு முன் சென்றிருக்கிற ஆவிக்குரிய செயல்வீரர்களுக்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வீரவணக்கம் செலுத்துகிறது. நமது தேசத்தைச் சுவிசேஷ மயமாக்குவதில் அவர்களது பங்களிப்பு என்றென்றும் நமது நினைவில் தங்கியிருக்கும்.

“மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன், அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.” (வெளி.21:3-4)

## பொதுச்செயலாளர் நியமன ஆராதனை:

இவ்வாராதனையில், நமது மால்தோ விசுவாசியான மாமறைதிரு. பத்ராஸ் மால்தோ அவர்கள், மால்தோ திருமண்டலத்தின் பேராயராகக் கலந்துகொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தது, மால்தோ மிஷனெரியாகிய எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

## கொரோனா 2-வது அலை:

கொரோனா 2-வது அலை நாடு முழுவதும் பரவி, நமது ஜனங்களைத் துன்பத்திலும் இழப்பிலும் ஆழ்த்தி வருகிறது. நமது நாட்டின் அரசாங்கங்களும், மருத்துவ உள்கட்டமைப்புகளும் இப்பேரழிவின் தாக்கத்தினால் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளன. தடுப்பூசி என்பது இப்போது இதற்கு அறியப்பட்டிருக்கிற ஒரே தீர்வாக இருந்தாலும், இது அனைவரும் பெற்றுக்கொள்ளும் அளவிற்குப் போதுமானதாக இல்லை. அதற்கான வாய்ப்பு கிடைக்கும்போது தாங்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## நமது தேசமக்கள் குணமடைய தேவனிடம் மன்றாடுவது:


கொரோனாவின் 2-வது அலை உருவாக்கிய துயரத்தின் நிமித்தமாக, நமது ஊழிய நிர்வாகத்தின் மூன்றுப் பிரிவுகளிலும் 72 மணி நேர ஜெபசங்கிலிக்கு நாம் அழைப்பு விடுத்துள்ளோம். நமது மிஷனெரிகள் மற்றும் நமது ஊழிய ஆதரவாளர்களில் அநேகர் நமது தேசத்தின் மீது தேவன் கிருபைகூர, அவருடைய இரக்க ஆசனத்தின் முன் மன்றாடி வருகின்றனர்.

## கேட் (CAD) பிரிவு உருவாக்கி, இந்தி, ஆங்கிலம் மற்றும் தமிழில் கொரோனா வழிகாட்டி துண்டுப்பிரதி வெளியிடல்:

இந்நெருக்கமான காலக்கட்டத்தில் நமது இயக்கத்தின் நிர்வாக ரீதியாக நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு உதவும்வகையில், ‘கொரோனா உதவிப் பிரிவு’ (Covid Assistance Desk - CAD) என்ற ஒன்று நமது ஊழியத்தின் தலைமை செயலகச் செயலர், ஜெபப்பிரிவுச் செயலர், நிர்வாகச் செயலர் மற்றும் சில அங்கத்தினர்களால் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் ‘கொரோனா வழிகாட்டுதலின் துண்டுப்பிரதி’யைத் தயாரித்து, அதை மின்-பிரதிகளாக விநியோகித்துள்ளனர்.

தாங்கள் அனைவரும் கொரோனா நெறிமுறைகளைப் பின்பற்றவும், தடுப்பூசி போட்டுப் பாதுகாப்பாக இருக்கவும் கேட்டுக்கொள்கிறேன். தேவன் நம்மைப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்து, தமது நற்செய்தியை நாம் தேசமெங்கிலும் எடுத்துச் செல்வதற்கு நமக்குத் தொடர்ந்து உதவிட வேண்டுமென்பது எனது ஜெபமாக அமைகிறது.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**

# அறியாதோர் மத்தியில் சுவிசேஷம்!

**"நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்"** (அப்.13:47)



பொதுவாக, சில கிறிஸ்தவ வெகு ஜனங்களிடம் இருக்கிற கேள்வி என்னவெனில், 'நமக்கு அருகாமையிலுள்ள பகுதிகளிலேயே கிறிஸ்துவை அறியாதோர் அநேகர் இருக்கிறார்கள்; அவர்கள் மத்தியில் மிஷனெரிப்பணியைச் செய்து, ஆலயங்கள் கட்டலாமே; ஏன் தூரமாக உள்ள காடு மலைகளில் வாழும் மக்கள் மத்தியில், அனைத்து மிஷனெரி ஊழியங்களும் செய்யப்படுகிறது?' என்பதே. இது மிகவும் தவறுதலான புரிந்துக்கொள்ளுதலாகும். நாம் வாழுகிற நகர்ப்புறங்களில் அநேக கிறிஸ்தவர்களும் தேவாலயங்களும் இருக்கும்போது, கிறிஸ்துவைக் குறித்து வாழ்வில் ஒருமுறையேனும் கேள்விப் பட்டிராத மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டியது மிகவும் பிரதான மானதாகும். இப்பணியை வெகுசொற்ப மான மிஷனெரி இயக்கங்களே செய்து வருகின்றன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

## வேதாகமம் கூறும் சான்றுகள்

இயேசுகிறிஸ்து தமது முதலாம் வருகையின் நோக்கத்தை, "தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்கா 4:18-19) என்று ஏசாயா தீர்க்கன் மூலமாகக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இதில் 'தரித்திரர்' என்கிற வார்த்தையை ஒருவகையில் 'ஏழைகள்' என்றும், ஆவிக்குரிய ரீதியில் 'நற்செய்தியை அறியாது வாழுகிற மக்கள்' என்றும் குறிப்பிடலாம். இயேசு, இவ்வுலகில் மனிதனாக ஊழியம் செய்தபோது, அவரைப் பின்தொடர்ந்த மக்களில் பெரும்பாலானோர் ஏழைகள்; அவர்களுக்கு ஆவிக்குரிய மற்றும் சரீர வாழ்வாதார ரீதியான தேவைகள் அதிகம் இருந்ததைக் காணலாம். மேலும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக உலகமெங்கும் செல்ல வேண்டுமென சீஷர்களைக் கிறிஸ்துவின் 'பிரதானக் கட்டளை' வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

## ஆதிதிருச்சபை கூறும் சான்றுகள்

ஆதிதிருச்சபையினர் கர்த்தரை ஆராதிப்பதற்காகத் திருச்சபையாகக் கூடிவந்தபோது, பரிசுத்த ஆவியானவர் சவுலையும் பர்னபாவையும் ஏவிய போது, ஆதிதிருச்சபையினர் அவர்களை நற்செய்தி அறிவிக்க அனுப்பி வைத்த தைப் பார்க்கிறோம் (அப்.13:2). அந்நேரத்திலிருந்து, அவர்கள் அறியப்படாத மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியத்தைத் தொடங்கினார்கள். பவுலின் மூன்று முக்கியமான மிஷனெரிப்பயணங்களும், சுவிசேஷத்தை அறியாத இனமக்கள் வாழ்ந்த தேசங்களில்தான் நடந்திருப் பதைக் காணலாம். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, சீஷர்கள் அனைவரும் உலகம் முழுவதும் சென்று சுவிசேஷத்தை அறியப்படாத மக்களுக்கு எடுத்துச் சென்றனர். அதன்படியே, இயேசுவின் சீஷரான புனித தோமா இந்தியாவிற்கு வந்து ஊழியம் செய்ததை வரலாற்றுச் சான்றுகள் பதிவு செய்துள்ளன.

## மிஷனெரி வரலாறு கூறும் சான்றுகள்

ஆரம்பக்கால மிஷனெரிகள் அறியப்படாத மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதில் எவ்வளவு கவனம் செலுத்தினார்கள் என்பதைப் புரிந்துக்கொள்ள திருச்சபை மற்றும் மிஷனெரிப்பணி வரலாற்றில் ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. புனித பிரான்சிஸ் சேவியர், 1541-ம் ஆண்டு ஜேசுட் மிஷனெரியாக இந்தியா வந்தார். இவர் ஆசியாவின் முன்னோடி மிஷனெரியாகக் கருதப்பட்டார். இவரது ஊழியங்கள் பெரும்பாலும் மிகவும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஏழைகள் மத்தியில்தான் அமைந் திருந்தன. தென்இந்தியாவிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் சுவி சேஷத்தை இவருடைய ஊழியத்தின் மூலம் பெற்றுக்கொண்டனர். 'நவீன மிஷனெரிப்பணி யுகத்தின் தந்தை' என்று போற்றப்படுகிற வில்லியம் கேரி, இந்தியாவின் கிழக்குப்பகுதியில் மிகவும் அற்புதமான ஊழியத்தைச் செய்தார். அறியப்படாத மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டிய தரிசனத்தைக் கருத்தில் கொண்டு, அவர் வேதாகமத்தைப் பல மொழிகளில் மொழி பெயர்த்தார்.

ஆரம்பக்கால மார்த்தோமா தேவாலயம் சுவிசேஷத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அநேக மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தியது. அதனால் மார்த்தோமா தேவலாயம் கேரளாவில் வலுவான ஓர் திருச்சபை அமைப்பாக மாறியது. ஏனெனில், அது தேவையிலுள்ள ஏழை மக்கள் மத்தியில் ஊழியம் செய்தது. லண்டன் மிஷனெரி சொசைட்டியின் மிஷனெரிகள் தென்இந்தியாவிற்கு வந்தபோது, திருவாங்கூர் என்று அழைக்கப்பட்டுவந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உயர்சாதியினரால் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே தங்கள் ஊழியத்தைத் திறம்பட செய்தனர். அதன் விளைவாக, தென்இந்தியாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மிகவும் கணிசமான அளவில் பெருகிற்று. அதுபோலவே லூத்தரன் திருச்சபை, இரட்சண்ய சேனை போன்ற மிஷனெரி இயக்கங்களும் நற்செய்திப்பணியைச் சுவிசேஷத்தை அறியாத மற்றும் வாழ்வாதாரத் தேவையில் வைக்கப்பட்டிருந்த ஏழைமக்களின் மத்தியில்தான் செய்தன.

வெளிநாட்டு மிஷனெரிகள் இந்தியா விற்கு வருவது நிறுத்தப்பட்டவுடன், அறியப்படாத மக்களினங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல, தேவன்

அநேக உள்நாட்டு சுதேச மிஷனெரி இயக்கங்களை எழுப்பினார். அவ்வாறாகவே, நமது இயக்கமாகிய நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவையும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது வாழ்வில் ஒருமுறையேனும் கேள்விப்பட்டிராத மக்கள் மத்தியில் சுவிசேஷப்பணியாற்ற தேவன் வழிநடத்தினார். அதனால், கிறிஸ்துவை அறியாது காடுகளிலும் மலைகளிலும் வாழ்கிற அநேக இன மக்கள் சுவிசேஷத்தால் தொடப்பட்டு, தங்கள் வாழ்வில் ஒரு ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கான மாற்றத்தைப் பெற்று வருகின்றனர். நமது மிஷனெரிகளின் அயராத உழைப்பினால், ஏழைமக்கள் புதிய வாழ்க்கையையும் நம்பிக்கையையும் பெற்றதற்கான அநேக சான்றுகள் உள்ளன. நற்செய்தியின் ஒளி, ராஜ் மஹால் மலைப்பகுதியிலுள்ள மால்தோ இனமக்களின் வாழ்க்கையை மாற்றியது. அம்மாற்றம், சந்தால் இனமக்களின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நமது மிஷனெரிகள் மால்தோ இன மக்கள் மத்தியில் ஊழியத்தை ஆரம்பிக்கும்போது, அம்மக்கள் கிறிஸ்துவை அறியாது கூட்டங்கூட்டமாக அழிந்துக் கொண்டிருந்தார்கள். நமது மிஷனெரிகள் திரு. ஜெயராஜ் மற்றும் அவரது மகன் டேவிட் லிவிங்ஸ்டன் அங்கேயே மலேரியா நோயினால் தாக்கப்பட்டு இறந்தப் பின்னர், அம்மக்கள் மத்தியில் தேவன் ஒரு திறந்தவாசலைத் தந்தருளினார். அநேக அற்புத அடையாளங்கள் அவர்கள் மத்தியில் நடைபெற்றன. இப்பொழுதும் அங்கு நமது ஊழியங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆரம்பக்காலங்களில் அங்கு நமது ஊழியத்தின்போது, 'நீங்கள் ஏன் இவ்வளவு தாமதமாக நற்செய்தியை எங்கள் கிராமங்களுக்கு எடுத்து வருகிறீர்கள்? எங்களது குடும்ப உறுப்பினர்களில் அநேகர் இந்நற்செய்தியை அறியாது இறந்து விட்டார்களே!' என்பது அந்த மால்தோ மக்களின் மனக்குமுறலாகக் காணப்பட்டது. தேவன் நமது மிஷனெரிகளுக்கு இவ்வினமக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கான சரியான சூழ்நிலையை நல்கியதால், ஆயிரக்கணக்கான மால்தோ மக்கள் கிறிஸ்துவண்டை வந்தார்கள். இன்று அங்கு ஒரு மால்தோ பேராயமே உருவாக்கப்பட்டு, மால்தோ இனத்தைச் சார்ந்த ஒருவரே அதற்குப் பேராயராகப் பொறுப்பேற்றிருக்கும் அளவிற்கு அங்கு ஊழியங்கள் வளர்ந்துள்ளதைக் காணலாம்.

சுவிசேஷத்தை அறிவிக்கும் மிஷனெரிப் பணிக்கு, ஒரு முழு சமுதாயத்தையே மாற்றும் மிகப்பெரிய வல்லமையை தேவன் அளித்துள்ளார். ஆம், நற்செய்தியை மீண்டும் மீண்டும் கேட்ட மக்கள் மத்தியில் அல்ல, வாழ்வில் இதுவரை கேட்டிராத மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்லப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஆஸ்வால்ட் ஸ்மித் என்கிற தேவ ஊழியர், **'சுவிசேஷத்தை அநேகர் ஒருமுறைகூட கேட்க வாய்ப்பில்லாதிருக்கும்போது, அதை இரு முறை கேட்பதற்கு எவருக்கும் உரிமையில்லை'** என்று கூறுகிறார். ஆம், நமது வாழ்வின் இறுதிமூச்சு வரை சுவிசேஷம் எட்டியிராத மக்கள் மத்தியில் அதை எடுத்துச்செல்லும் மிஷனெரி ஊழியத்தில் நாமனைவரும் இணைந்து பலவிதங்களில் செயல்படுவதற்கு தேவன் நமக்குக் கிருபை புரிவாராக!

**– அருள்திரு. டேவிட் பாண்டிங்**

*செயலர் – FMPB பணித்தள நிர்வாகம்*

# பாக்கியம் பெறும் பரேலா இனமக்கள்!

(ஓர் அறிமுகம்)



பரேலா இனமக்கள்–மத்தியப்பிரதேசத்திலுள்ள குணா, சிவபுரி மற்றும் பிற மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். ஏறக்குறைய 15 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இவ்வினமக்கள், பீல் இனமக்களின் ஒரு பிரிவினராகவும், இவர்கள் மத்தியப்பிரதேசத்திலுள்ள கார்கோன் மாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்ததாகவும் கருதப்படுகிறது. 'பரேலா' என்கிற வார்த்தை லத்தீன் மொழி வார்த்தை என்றும், அதன் அர்த்தம் 'தைரியம்' மற்றும் 'துணிச்சல்' என்றும் பொருள்படுகிறது. இவர்கள் தங்களுக்குள் *பரேலா* என்கிற மொழியைப் பேசுகிறார்கள்.

பரேலா இனமக்கள்–சமூக, கலாச்சார மற்றும் புவியியல் சூழல் நிமித்தமாக, பெரும்பாலும் பிரதான சமுதாயத்திலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனர். காடு மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதியுமின்றி வாழ்கிற இவர்கள், ஏழ்மையிலிருந்தாலும் இயற்கையாகவே மிகவும் இனிமையான அன்பான குணம் படைத்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களின் முக்கியமான தொழில் விவசாயமும், கால்நடைகளை வளர்ப்பதுமாகும். இவர்கள் பெரும்பாலும் உயர்சாதியினரால் ஆளப்படுகின்றனர். இவர்களில் ஆண்களும், பெண்களும் மற்றும் சிறுவர் சிறுமியர்களும் அன்றாடக வேலைசெய்து பிழைக்கின்றனர். இவர்கள் அசைவ உணவினராக இருந்தாலும், மாடுகள் மற்றும் பன்றிகளை உணவாக உட்கொள்ள மாட்டார்கள். 'கின்ஷ்ரி' இவர்களின் குலதெய்வமாகும்.

## கலாச்சார அம்சங்கள்:

இவர்கள் மிகவும் எளிமையான ஆடைகளை உடுத்தினாலும், பெண்களின் ஆடைகளில் அநேக தனித்துவங்கள் காணப்படுகின்றன. பெண்கள் அணியும் மேலாடைகளின் கீழ்பகுதியில் இரு பைகள் காணப்படும். இவர்கள் தலையில் போட்டுள்ள தாவணி இவர்களது வயதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவர்கள் அலுமினியம், வெள்ளியினாலான கணரக நகை மற்றும்

கலைநயமிக்க ஆபரணங்களை அணிகிறார்கள். இவர்கள் அணிகிற மூக்குத்தி இந்திய பாரம்பரியத்தைக் காட்டுவதாகக் காணப்படுகிறது.



**திருமணம்:**

பொதுவாக நிச்சயிக்கப்பட்ட திருமணமுறைதான் இவர்கள் மத்தியில் வழக்கத்திலிருந்து வருகிறது. ஆண்கள் 14-16 வயதிலும், பெண்கள் 12-15 வயதிலும் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்கள் தங்களது வருங்கால மனைவியை அல்லது கணவரை, 'ஹோலி' பண்டிகைக்கு ஒரு வாரத்திற்கு முன்பு கொண்டாடப்படுகிற 'பங்கோரியா' என்கிற பண்டிகையின்போது, தாங்கள் விரும்பும் நபரின்மீது வண்ணமயமான பொடியைத் தூவி, அவர்களைத் தங்களது வாழ்க்கைதுணையாகத் தேர்வு செய்கிறார்கள்.

**பண்டிகைகள்:**

பரேலா இனமக்கள், பல பண்டிகைகளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். அவற்றில் முதன்மையானது நவாய் மற்றும் தீபாவளி பண்டிகைகளாகும். அறுவடையை முன்னிட்டு **நவாய் பண்டிகையைக்** காய்கறிகள் மற்றும் தானியவகைகளை முதற்காணிக்கையாக இவர்கள் தங்களது குலதெய்வத்திற்குப் படைத்து நன்றி செலுத்தும் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள்.

## பரேலா இனமக்கள் மத்தியில் நமது ஊழியம்:

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, மத்தியப் பிரதேசம், புந்தல்கண்ட் பிராந்தியத்திலுள்ள குணா மற்றும் சிவபுரி மாவட்டங்களில் வாழும் பரேலா இனமக்கள் மத்தியில் 2002-ம் ஆண்டு அருள்திரு. அசரியா ராஜ்குமார் அவர்களது தலைமையில் தனது ஊழியத்தை ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து, மிஷனெரிகளாக அருள்திரு. பால் தயாசிங் மற்றும் சகோ. சுரேஷ் ஆகியோர் அங்குப் பணியாற்றினர். பின்னர் அருள்திரு. பச்சியாபாய், சகோ. ஹோசில் நாயக், சகோ. காசிராம், சகோ. கரன்சிங், சகோ. ஐசக் ராஜாமணி ஆகிய நமது மிஷனெரிகள் குடும்பமாக இம்மக்கள் மத்தியில் தங்கி ஊழியம் செய்தனர். தற்போது, சகோ. ஹெபல்குமார், சகோ. ராகேஷ் கவித் ஆகிய மிஷனெரிகள் குடும்பமாக ஏழு சுதேச ஊழியர்களோடு சேர்ந்து குணா, சிவபுரி மற்றும் நகர்காட்





மாவட்டங்களிலுள்ள சுமார் 115 கிராமங்களில் வாழும் இரண்டு இலட்சம் பரேலா இனமக்கள் மத்தியில் மிஷனெரிப்பணியைச் செய்து வருகிறார்கள்.

தேவன் இம்மக்கள் மத்தியில் அற்புத அடையாளங்கள் மூலம் பலத்த கிரியைகளை நடத்தி வருகிறார். மேலும், நமது மிஷனெரிகள் நடத்துகிற மாலைநேர ஜெபக்கூட்டங்கள் மற்றும் தனித்தாள் ஊழியங்கள் மூலமாக அநேகர் கிறிஸ்துவண்டை வருகிறார்கள். இந்த பரேலா இனமக்கள் குடும்ப உறவில் அதிக நம்பிக்கையும் மரியாதையும் பாசமும் பற்றும் கொண்டுள்ளதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பரேலா விசுவாசிகள் மூலம் அவர்களுடைய உறவினர்களுக்குச் சுவிசேஷம் எடுத்துரைக்கும் முறை நமது ஊழியத்தில் மிகவும் வெற்றிகரமான அணுகுமுறையாகக் காணப்படுகிறது. இம்முறை மூலம் மேலும் பலநூறுபேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கின்றனர்.

நமது ஊழியத்தின் மூலமாக இதுவரை, இவர்கள் மத்தியில் இரண்டு ஆலயங்களைக் கட்டியெழுப்பவும், 16 இடங்களில் ஆராதனைகள் நடத்தவும், 28 இடங்களில் ஆராதனைக்குழுக்களை நிறுவவும், சுமார் 2010 நபர்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும் மற்றும் பின்தொடர் ஊழியங்களைச் செய்யவும் தேவன் வழிநடத்தி யுள்ளார். அநேக எதிர்ப்புகள் காணப்பட்டாலும், தேவன் இவர்கள் மத்தியில் நல்ல திறந்தவாசலை அருளியுள்ளார்.

பரேலா கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்விலும், திருச்சபை ஊழியங்களிலும் தங்களது பங்களிப்பைப் பெரிதும் நல்கி வருகிறார்கள். குறிப்பாக, இவர்கள் மத்தியில் நடைபெறும் மேளாக்கள், கூடுகைகள், கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் பண்டிகைகால கொண்டாட்டங்களுக்கான செலவீனங்களை இவர்கள் தாங்களாகவே பொறுப்பெடுத்து செயல்படுத்தி வருவது, இவர்களது ஆவிக்குரிய வளர்ச்சியின் அளவீட்டைக் குறிப்பிடுவதாக அமைகிறது. மேலும், பரேலா விசுவாசிகளின் வெளிசந்திப்பு ஊழிய ஈடுபாடும், ஆவிக்குரிய வாஞ்சையும் உற்சாகமும் இவர்கள் மத்தியில் பெரிய ஊழிய வாய்ப்பை நமது மிஷனெரிகளுக்கு அளித்துள்ளது.



## சமூக மேம்பாட்டு ஊழியம்:

கடந்த 2019-ம் ஆண்டில் ஐ.இ.எல்.சி உதவியுடன் சிந்தவாராவில் சிறுவர் சிறுமியர்களுக்கான பராமரிப்பு மையமொன்று அமைக்கப்பட்டு, அதன்மூலம் 29 பரேலா விசுவாசிகளின் பிள்ளைகள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் 20 பிள்ளைகள் ஜான்சி மற்றும் பிந்த் சிறுவர்கள் விடுதிகளில் தங்கி கல்வி கற்று வருகிறார்கள்.

## இலக்கும் தரிசனமும்:

கர்த்தருக்குச் சித்தமானால் 2025-ம் ஆண்டின் இறுதிக்குள் பரேலா இனமக்கள் மத்தியில் மேலும் 2000 பேரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும், 5 ஆலயங்களைக் கட்டியெழுப்பவும், 50 இடங்களில் ஆராதனைகளை நடத்தவும், 20 சுதேச

ஊழியர்களைக் கண்டுபிடிக்கவும், சுமார் 2 இலட்சம் மக்களைச் சுவிசேஷத்தால் சந்திக்கவும் திட்டமிட்டு நமது மிஷனெரிகள் செயல்பட்டு வருகிறார்கள்.

## ஜெபக்குறிப்புகள்:

- பரேலா இன விசுவாசிகள் தங்களது தீய பாரம்பரிய வழக்கங்களை முழுவதுமாக விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பின்பற்றத்தக்கதாக;
- பரேலா இனமக்கள் வாழும் அனைத்து மாவட்டங்களுக்கும் சுவிசேஷம் சென்றடையத்தக்கதாக;
- விசுவாசிகளின் வாழ்வாதாரப்பணிகள் அவர்கள் ஆராதனையில் கலந்து கொள்வதற்குத் தடையாக அமையாதிருக்க;
- வேலைகளினிமித்தம் புலம்பெயர்ந்த பரேலா விசுவாசிகள் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பேணி காக்க;
- புரட்டு கிறிஸ்தவப் போதனைகளால் நமது விசுவாசிகள் இழுப்புண்டுப் போகாதிருக்க;
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் மனமாற்றம் அடைய;
- ஊழியத்தைப் பெருமளவில் செய்வதற்காக இன்னும் அநேக மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ பணியாளர்கள் எழும்பி வர;
- பரேலா விசுவாசிகளின் பிள்ளைகளுக்குத் தனியாக குணா பணித்தளத்தில் சிறுவர் விடுதி அமைக்கப்பட;
- பரேலா விசுவாசிகள் தங்களது அனைத்து ஊழியத்தேவைகளையும் முழுமையாகத் தங்கள் மத்தியிலிருந்தே கண்டுபிடிக்க;
- பரேலா இளைஞர்கள் இயக்கமாக எழும்பி, தங்களது வருங்கால திருச்சபை மற்றும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப;
- சிறுவர்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியங்களின் மேம்பாட்டிற்காக;
- வெகுவிரைவில் முதியோர் கல்வித்திட்டம் இவர்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு, அனைத்து விசுவாசிகளும் வேதாகமத்தை நன்கு கற்றறிய;
- பரேலா இனமக்கள் கூட்டங்கூட்டமாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தேவனால் மிகவும் ஆசீர்வதிக்கப்படுவதோடு, அநேகருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்கால் களாகக் காணப்பட ஜெபிப்போம்.

ஆம், பரேலா இனமக்கள் யாவரும் பரலோகத்தின் பாக்கியத்தைப் பெற்று வாழவிருக்கும் நாட்கள் ஒன்றும் வெகுதூரத்தில் இல்லை என்பதை நமது விசுவாச கண்களால் பார்த்துணர்ந்து, தேவனுக்கு மகிமை செலுத்துவோம்!

*தகவல்:* **சகோ. ஐசக் ராஜாமணி & சகோ. ஹெபல் குமார்**
*FMPB, முன்னோடி மிஷனெரிகள் – பரேலா இனமக்கள் ஊழியம்*



# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் புதிய பொதுச்செயலாளர் நியமன ஆராதனையின் ஆசீர்வாதங்கள்

தேவ ஒத்தாசையால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 8-வது புதிய பொதுச்செயலாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்களின் நியமன ஆராதனை, கடந்த 2021 ஏப்ரல் 24-ம் தேதி, மாலை 6 மணியளவில் சென்னை-எழும்பூரிலுள்ள தூய அந்திரேயா திருச்சபை (The Kirk) தேவாலயத்தில் வைத்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. கொரோனா தொற்றுநோயின் பரவல் அதிகமாகக் காணப்பட்டாலும், அரசு கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி அநேக திருச்சபைகள், மிஷனெரி இயக்கங்கள் மற்றும் ஜெபக்குழுக்களின் தலைவர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டனர்.

தூய அந்திரேயா திருச்சபையின் குருவானவர் அருள்திரு. ஐசக் ஜான்சன் அவர்கள், ஆரம்ப ஜெபம் ஏறெடுக்க, FMPB தலைமைச் செயலகத்தின் செயலாளர் அருள்திரு. பிரபாகர சாரதி அவர்கள், இக்கூடுகையில் முக்கியமான தலைவர்களை அறிமுகம் செய்து அனைவரையும் வரவேற்றார்கள்.

அதன்பின் புதிய பொதுச்செயலாளர் அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். அருள்திரு. ஐசக் ஜான்சன் அவர்களும், புதூர் மெதடிஸ்ட் திருச்சபையின் குருவானவர் அருள்திரு. பிரேம்குமார் ஆகியோரும் இணைந்து, புதிய பொதுச்செயலாளர் நியமன ஆராதனையை நடத்தினார்கள்.

அருள்திரு. பிரேம்குமார் அவர்கள் தனது செய்தியில், மோசேயின் தலைமைத்துவத்தை முன்னுதாரணமாகக் காட்டி, சீஷத்துவத்தின் விலைகிரயத்தைக் (மாற்கு 8:34) கோடிட்டுக் காட்டினார்கள். அதாவது, மோசே ஒருபோதும் தனது தலைமைத்துவ நன்மைகளைத் தனக்குரியதாக்கிக் கொள்ளவில்லை. இத்தகைய தலைமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம் என அவர் குறிப்பிட்டார்.

பின்னர் அநேக முக்கியமான தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களைப் புதிய பொதுச்செயலாளருக்குத் தெரிவித்து ஊக்குவித்தனர். குறிப்பாக –

**பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுபடும்**
**அருள்திரு. சுதர்சன் தாமஸ் அவர்கள் :**

“நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் எந்தவொரு பதவியும் அந்தஸ்து அல்ல; மாறாக அது மிகவும் அதிக பொறுப்பைக் கொண்டது. இக்காலக்கட்டத்தில் இப்பொறுப்பை ஏற்கும் அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களுக்கு எனது பங்களிப்பையும், மனமொத்த ஆதரவையும் அளிக்க உறுதியளிக்கிறேன்.”



**மாமறைதிரு. பத்ராஸ் மால்தோ,**
**பேராயர் – மால்தோ பேராயம், ஜார்க்கண்ட் :**

‘‘நாங்கள், FMPB மிஷனெரிகளின் வருகையாலும் தென்னிந்தியாவிலுள்ள ஜெபக்குழுக்களின் ஜெபம் மற்றும் தியாகமான ஈகையாலும் குடி, நோய், பட்டினி மற்றும் அனைத்து தீயப்பழக்கவழக்கங்களிலிருந்தும் விடுதலைபெற்று நல்வாழ்வைப் பெற்றுள்ளோம். ஒருவேளை FMPB மிஷனெரிகள் எங்கள் மண்ணில் காலடியெடுத்து வைக்காதிருந்திருந்தால், எங்கள் மால்தோ சமுதாயமே அழிந்துபோயிருக்கும். எழுத்து வடிவமற்ற எங்கள் மொழியிலே முழுவேதாகமத்தையே FMPB எங்களுக்குக் கொடுத்தது, மிகப்பெரிய பாக்கியமாகும்.

அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், எங்கள் பகுதியிலுள்ள தீன்பஹாா் என்ற இடத்தை மையமாகக் கொண்டு சுமார் 86 கிராமங்களில் ஆலயங்களையும், ஆராதனைக் குழுக்களையும், தனது சகஊழியர்களோடு இணைந்து நிறுவினார். அவர்கள் விதைத்த சுவிசேஷ விதைதான் இன்று மிகப்பெரிய பலனைக் கொடுத்துள்ளதோடு, அப்பகுதி யிலுள்ள விசுவாசிகளனைவரும் தங்களது வாழ்வில் ஒரு முழுமையான மேம்பாட்டை அடையச்செய்துள்ளது. நமது தேவன் அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களை ‘ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்’ (சங்.45:7); மேலும் அவரை இரட்டிப்பான நன்மைகளால் ஆசீர்வதிப்பாராக!”

**திரு. அன்பு (MUT தலைவர்) :**

“தேவனுடைய ஊழிய அணுகுமுறை என்னவெனில், ஆயத்தமாக்கப்பட்ட ஒருவரை ஆயத்தமாயிருக்கிற ஒரு பொறுப்பில் பணியமர்த்துவதாகும். இயேசு கூறுகிறார்– ‘ஒருவன் எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால், அவன் என்னைப் பின்பற்றக்கடவன்; நான் எங்கு இருக்கிறேனோ, எனது ஊழியக்காரனும் அங்கிருப்பான்.’ எனவே எங்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருக்கிறாரோ, அங்குதான் அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களை இப்பொறுப்பினால் அவர் கனப்படுத்தியிருக்கிறார். இதுவரை நடைபெறாத வல்லமையுள்ள காரியங்களை தேவன் அவர் மூலமாக நடத்த அவருக்கு எனது வாழ்த்துக்களும், ஜெபமும்!”

**அருள்திரு. ஜார்ஜ் எட்வர்ட், மால்தோ வேதாகம மொழிப்பெயர்ப்பாளர் :**

“நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலமாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பின்னர் தங்களது மால்தோ சமுதாய திருச்சபைப் பேராயத்தின் பேராயராகி, தங்கள்

மண்ணில் சுவிசேஷம் அறிவிக்க வந்த மால்தோ மிஷனெரி-மாமறைதிரு. பத்ராஸ் மால்தோ, இன்று FMPB-ன் புதிய பொதுச்செயலாளர் நியமனம் செய்யப்படும் ஆராதனையில், ஒரு பேராயராகக் கலந்துகொண்டு வாழ்த்து தெரிவிப்பது, உலகமெங்கிலுமுள்ள திருச்சபை மற்றும் மிஷனெரி ஊழிய வரலாற்றில் நடைபெறாத ஒரு வரலாற்றுச்சம்பவம் ஆகும்.

அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், அநேக தாலந்துகளாலும் திறமைகளாலும் நிறைந்தவராக இவ்வியக்கத்தில் ஒரு விலையேறப்பெற்ற முத்தாகக் காணப்படுகிறார். நிச்சயம் அவர் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இப்பொறுப்பில் சிறந்து விளங்குவார் என நம்புகிறேன். இந்நிலையை அடையும்வரை அவரை வழிநடத்திய தேவன், இனிமேலும் அவரை வல்லமையாகத் தொடர்ந்து நடத்த எனது வாழ்த்துக்கள்!"

**அருள்திரு. ராஜ் (NPN) :**

"தலைமைத்துவம் மாறும்போது புதிதாகப் பொறுப்பெடுக்கிறவர், தனக்கு முன்னால் இப்பொறுப்பிலிருந்தவர்களின் நல்ல முன்மாதிரி மற்றும் மரபுகளை நினைவில் கொள்ள வேண்டுமென வேதாகமம் வலியுறுத்துகிறது. இத்தகைய FMPB-யின் முன்னாள் பொறுப்பாளர்களை இந்நாள் நமது தேசம் மற்றும் நமது இயக்கத்தின் ஆசீர்வாதத் திற்காக, அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென ஞாபகப்படுத்துகிறேன். தலைமைத்துவத்தில் அனைத்து பண்புகளையும்விட, நல்ல குணாதிசயமே அதிமுக்கியம். அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களே, 'பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக!'" (ரோ.15:13)

**திரு. சாம் மனோகர் (அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களின் தாய்த் திருச் சபையாகிய குமரி பேராயத்தின் CSI சேனம்விளை திருச்சபையின் மூப்பர்) :**

"இம்மாபெரும் இயக்கத்தின் பொதுச்செயலாளர் என்கிற பொறுப்பு மிகவும் பழுவானதாகக் காணப்பட்டாலும், நாங்கள் திருச்சபையாகத் தங்களை எமது ஜெபத்தினால் தாங்கிக்கொள்வோம் என இச்சமயம் உறுதியளிக்கிறோம்."

**அருள்திரு. அறிவர். ராஜாசிங் எலியாஸ், பொதுச்செயலாளர் - IEM (கடிதத்தின் வாயிலாக) :**

"IEM நிறுவனர் அருள்திரு. அறிவர். தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் எழுதிய 'சிலுவையின் வீரர்கள்' என்கிற புத்தகத்தை வாசித்துத் தொடப்பட்டு அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் முழுநேர ஊழியத்தில் அடியெடுத்து வைத்ததாக, ஒரு சமயம் அவர்கள் எங்களது மிஷனெரிப்பயிற்சி கூட்டத்தில் மிஷனெரிகளுக்குப் பயிற்சி கொடுக்க வந்தபோது கூறியதை நினைவுகூருகிறேன். அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், அநேக தலைப்புகளில் பயிற்சிக் கொடுத்ததின்மூலம் IEM வட்டாரத்தில் மிகவும் அறிமுகமானவர். இச்சவாலான காலக்கட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிற தலைமுறையினர்களின் மத்தியில், இப்பொறுப்பேற்றிருக்கும் அன்பு சகோதரரை, தேவன் தமது ஆவியால் பெலப்படுத்த IEM குடும்பங்களாக ஜெபிப்போம் என உறுதி யளிக்கிறோம்."

அதைத்தொடர்ந்து திரு. வில்சன், விஷ்வவாணி இயக்கத்தின் பொதுச்செயலாளர் மற்றும் திரு. அலெக்ஸ், BYM பொருளாளர் ஆகியோர் தங்கள் இயக்கங்களின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

**அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்களின் ஏற்புரை :**



''நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இதற்கு முன்னர் பொதுச்செயலாளராக இருந்தவர்கள் யாவரும் மிகவும் தலைசிறந்தவர்கள். இப்பொறுப்பிற்கு முழுவதும் தகுதிப்பெற்றவனாக என்னை நான் கருதவில்லை. இவ்வியக்கத்தில் கடந்த 34 ஆண்டுகளாக தேவன் எனது கையைப்பிடித்து, அவரது கனமான ஊழியத்தில் நடத்திச் சென்றார். எனது சகஊழியர்கள் என்னைப் பலவிதங்களில் உருவாக்கினார்கள்; இவ்வியக்கத்தில் தேவன் அருளிய அத்தகைய நல்ல நண்பர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். சுவிசேஷத்தைத் தங்களது வாழ்வில் ஒருமுறையேனும் கேள்விப்பட்டிராத நமது இந்திய தேசத்தின் அனைத்து இனமக்களையும் நோக்கி, நமது இயக்கத்தின் தரிசனத்தையும் நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு, நானும் பவுல் அப்போஸ்தலன் கூறுவதுபோல, 'இலக்கை நோக்கித் தொடருகிறேன்.''' (பிலி.3:14)

இந்நிகழ்ச்சிகளை நமது இயக்கத்தின் தமிழ்நாடு விரிவுப்பணி மண்டலச் செயலாளரான அருள்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்கள். மனிதவள மேம்பாட்டுச் செயலாளர் அருள்திரு. ஆபிரகாம், அவர்கள் நேரடியாகவும் இணையதளத்தின் வாயிலாகவும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். இறுதியில் அருள்திரு. பிரேம்குமார் அவர்கள் நிறைவு ஜெபம் செய்து ஆசீர்வாதம் கூற, இச்சிறப்புக்கூடுகை இனிதே முடிந்தது. தேவனுக்கே மகிமை!

## மகிமைக்குள் பிரவேசித்தார்



ஈரோடு மாவட்டத்தின் ஆரம்பக்கால ஜெபக்குழுத் தலைவர்களில் ஒருவரான திரு. நல்லமுத்து அண்ணன் அவர்கள் (79-வயது), கடந்த 05.04.2021 அன்று மாரடைப்பினால் தேவராஜ்யம் அடைந்தார்கள். ஜெபத்தோடும் மிகுந்த அர்ப்பணத்தோடும் 1986-ம் ஆண்டு முதல் கடந்த 2021 மார்ச் மாதம் வரை அநேக குடும்பங்களைச் சந்தித்து, ஜெபித்து, காணிக்கைகளைச் சேகரித்து மிஷனெரிப்பணியை நிறைவேற்றினவர்கள். தனது இரண்டாவது மகன் அருள்திரு. சார்லஸ் சாம்ராஜ் அவர்களை தேவனது பணிக்காக உருவாக்கியவர்கள். புதன்கிழமை தோறும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் உபவாச ஜெபம் நடத்த, ஜெபிக்க தனது இல்லத்தைத் திறந்து கொடுத்தவர்கள். திடீரென்று அண்ணனை இழந்து தவிக்கும் அவரது அன்பு மனைவி திருமதி. மல்லிகா அக்கா மற்றும் இரண்டு மகன்களின் குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

– FMPB, கௌரவ விரிவுப்பணி செயலர், ஈரோடு.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**அருள்திரு. K. இஸ்ரவேல்**
(1957 - 2021)

அருள்திரு. K. இஸ்ரவேல் அவர்கள், ஆந்திரப்பிரதேசம், கோதாவரி மாவட்டத்திலுள்ள பசிவேடலா கிராமத்தில் கிறிஸ்தவப் பெற்றோர்களான திரு. K. சாமுவேல் மற்றும் திருமதி. எஸ்தர் அவர்களின் மகனாக 1957-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி பிறந்தார். இவர் தனது 6-வது வயதிலேயே தகப்பனாரை இழந்ததால், தாயாரின் பராமரிப்பில் வளர்க்கப்பட்டார். சகோதரி. தனேதி உத்தம ஸ்ரீயை 1977-ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதி திருமணம் செய்துகொண்டார். இவர் 1978-ம் ஆண்டு தனது திருச்சபையில் வைத்து நடைபெற்ற சிறப்புக்கூடுகையில் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தேவன் இவர்களது திருமண வாழ்வை ஆசீர்வதித்து, சாமுவேல் ஜாண்சன் என்கிற மகனையும், ஷாரோன் என்கிற மகளையும் தந்துள்ளார். தற்போது இவர்களது மகன் வேலூர் இன்ஸ்ட்டியூட்-ல் பேராசிரியராகவும், மகள் திருமணம் முடிந்து குடும்பமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

சகோ. K. இஸ்ரவேல் அவர்கள், தன்னை ஊழியத்திற்கென ஆயத்தப்படுத்திக்கொள்ள ஒரு இறையியல் கல்லூரியில் பயின்றார். அப்பொழுது இவருக்கு உத்தரப்பிரதேசத்திலுள்ள சில மிஷனெரிகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அச்சந்திப்பு இவரை முழுநேர ஊழியத்திற்கென வழிநடத்திற்று. எனவே 1987-ம் ஆண்டு ஜுன் 25-ம் தேதி, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் இணைந்தார். அதன்பின் மகாராஷ்டிராவிலுள்ள யோவத்மால் கல்லூரியில் மிஷனெரிப்பயிற்சி முடித்து, உத்தரப்பிரதேசத்திலுள்ள பஸ்தி பணித்தளத்தை மையமாக வைத்து ஹிந்தி பேசும் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யப் பணியமர்த்தப்பட்டார். பின்னர் இவர் மத்தியப்பிரதேசத்திலுள்ள பிந்த் மற்றும் டத்தியா ஆகிய பணித்தளங்களிலும் பணியாற்றினார். அதன்பின், 2005-ம் ஆண்டிலிருந்து ஆந்திரப்பிரதேசத்திலுள்ள எல்லூருவை மையமாக வைத்து விரிவுப்பணியாற்றி வந்தார்.

இவர் கடந்த 2021-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வந்தார். ஆனால் மே 5-ம் தேதி சிகிட்சை பலனளிக்காமல், இவ்வுலக ஓட்டத்தை முடித்தார்.

அருள்திரு. K. இஸ்ரவேல் அவர்கள், நமது இயக்கத்தில் கடந்த 34 ஆண்டுகளாக ஆற்றியப்பணி மிகவும் பாராட்டத்தக்கது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பமாக, சகோ. K. இஸ்ரவேல் அவர்களின் நல் வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். அவரது அன்பு மனைவி திருமதி. தனேதி உத்தம ஸ்ரீ மற்றும் பிள்ளைகளின் குடும்பத்தை தேவன் ஆற்றித்தேற்றி அரவணைத்துக்கொள்ள ஜெபிப்போம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**திருமதி. ஸ்டெல்லா ராணி கில்பர்ட்**
(1967 - 2021)

சகோதரி. ஸ்டெல்லா ராணி அவர்கள், 1967-ம் ஆண்டு மே 7-ம் தேதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் காட்டாத்துறை என்ற ஊரில் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில், பெற்றோர்களான திரு. தங்கப்பன் மற்றும் திருமதி. ஞான சௌந்தரி அவர்களின் மகளாகப் பிறந்தார். இவர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப்பயிற்சி பெற்றிருந்ததால், வேலைத்தேடி சென்னையிலுள்ள தனது பெரியம்மா வீட்டில் சில காலம் வாழ்ந்து வந்தார். இவர்களது பெரியம்மாவின் கணவர் திரு. தாசையன் அவர்கள், ஒரு நல்ல கிறிஸ்தவராகவும் நமது ஊழியத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் காணப்பட்டதால், இக்குடும்பத்தின் மூலமாக இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். கே.கே. நகரிலுள்ள நமது ஸ்கேன் பொறுப்பாளர் திரு. M.A. விக்டர் அவர்கள் மூலமாகச் சகோதரி. ஸ்டெல்லா அவர்களுக்குத் தன்னார்வ ஊழியராக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமைச் செயலகத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு கிட்டியது.

பின்னர் இவர் 1990-ம் ஆண்டு மே 28-ம் தேதி, நமது தலைமைச்செயலகத்தில் நிதித்துறையில் பணியாற்றி வந்த சகோ. கில்பர்ட் வில்லியம்ஸ் அவர்களைத் திருமணம் செய்தார். தேவன் இவர்களது திருமண வாழ்வை ஆசீர்வதித்து, ஈதல் ஷீபா ராணி, ஸ்டெஜில் ஜூலியட் ராணி ஆகிய மகள்களையும், கிப்ட்சன் என்ற மகனையும் ஈந்துள்ளார். தற்போது இவர்களது இரு மகள்களும் திருமணம் முடித்து, குடும்பமாக வாழ்கின்றனர்; மகன் கிப்ட்சன் பெங்களூரில் MCA படித்துக்கொண்டிருக்கிறார்.

இவர்கள் குடும்பமாக 1991-ம் ஆண்டிலிருந்து சென்னையை மையமாக வைத்து, நமது இயக்கத்தின் விரிவுப்பணியைச் செய்து வந்தார்கள். பின்னர் இவர்கள் திருச்சிக்குப் பணிமாற்றம் பெற்று, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்குப் பொறுப்பாக விரிவுப்பணிச் செய்து வந்தார்கள். அதன்பின், இவர்கள் பெங்களூரை மையமாக வைத்து கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களுக்குப் பொறுப்பாக விரிவுப்பணியாற்றி வந்தார்கள். நமது இயக்கத்தின் விரிவுப்பணியில் இவர்களது பங்கு பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது கணவர் அருள்திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் அவர்களுக்கு முதலாவதாகக் கொரோனா தொற்றுநோய் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து, திருமதி. ஸ்டெல்லா மற்றும் மகனும், 2-வது மகளும் இந்நோயினால் தாக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் தங்களை வீட்டிலிருந்தே தனிமைப்படுத்திக் கொண்டு சிகிட்சை பெற்று வந்தார்கள். திருமதி. ஸ்டெல்லா அவர்களுக்கு இந்நோயின் தாக்கம் அதிகமாகியதால், இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிட்சை பெற்று வந்தார். ஆனாலும், ஆக்சிஜன் அளவு இவரது உடலில் நிலையாகக் காணப்படாததால், இவர் கடந்த மே மாதம் 8-ம் தேதி காலை 4.45 மணியளவில் இவ்வுலக ஓட்டத்தை முடித்தார். இவரது சரீரம், பெங்களூரிலுள்ள கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குடும்பமாக, திருமதி. ஸ்டெல்லா ராணி கில்பர்ட் அவர்களின் மறைவிற்காக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவன் தாமே அருள்திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் அவர்களையும், இரு மகள்களின் குடும்பத்தினரையும், மகனையும் ஆற்றித்தேற்றி அரவணைத்துக்கொள்ள ஜெபிப்போம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



## திருமதி. சாந்தி ஆனந்தராஜ்

(1965 - 2021)

திருமதி. சாந்தி ஆனந்தராஜ் அவர்கள், 1965-ம் ஆண்டு அக்டோபர் 25-ம் தேதி, தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள கூடலூர் என்ற ஊரில் கிறிஸ்துவை அறியாத பெற்றோரான திரு. பொய்யாமலை மற்றும் திருமதி. சிலம்பை ஆகியோரின் மூத்த மகளாகப் பிறந்தார். இவரது மாமா சகோ. பெருமாள் மூலமாக இவர்களது குடும்பம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டது. இவரது தாயாருடைய சகோதரியாகிய திருமதி. டெய்சி மற்றும் அவரது கணவர் திரு. விக்டர் பாக்கியராஜ் அவர்கள் ஏற்கனவே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிகளாக உத்தரப்பிரதேசத்தில் பணியாற்றி வந்தனர். அவர்கள் வீட்டில் இவர் சில காலங்கள் தங்கியிருந்தபோது, அவர்களின் வாழ்க்கையும் ஊழியமும் இவரை மிகவும் கவர்ந்ததால், இவர் தன்னை முழுநேர ஊழியத்திற்கென அர்ப்பணித்தார்.

இவர் ஊழியத்திற்கென தன்னை ஆயத்தப் படுத்தும்விதமாக, அலகாபாத்திலுள்ள கல்வாரி வேதாகமக் கல்லூரியில் பயின்றார். அதன்பின், நமது இயக்கத்தின் மூலம் ஜார்க்கண்டிலுள்ள மால்தோ இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்த சகோ. ஆனந்தராஜ் அவர்களோடு இவருக்கு 1988-ம் ஆண்டு ஆகஸ்டு 19-ம் தேதி திருமணம் நடைபெற்றது. தேவன் இவர்களை ஆஷிஷ் பிரேம்ராஜ் மற்றும் அபிஷேக் சந்தோஷ் ராஜ் ஆகிய இரு மகன்களால் ஆசீர்வதித்துள்ளார்.

பிறகு, திருமதி. சாந்தி அவர்கள், தனது கணவரோடு சேர்ந்து முதன்முதலாகத் தென் பீகாரிலுள்ள தல்ஜாரி என்று பணித்தளத்தில் 1988-ம் ஆண்டு ஊழியம் செய்தார்கள். பின் 2000-ம் ஆண்டு வரை தல்ஜாரி, தீன்பஹார், ஹரிரன்பூர் ஆகிய ஜார்க்கண்ட் மாநிலப் பணித்தளங்களிலுள்ள மால்தோ இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்து, அநேக திருச்சபைகளையும், ஆராதனைக்குழுக்களையும் கட்டியெழுப்பியதோடு, பெண்கள் மத்தியிலும் அரும்பணியாற்றினார்கள். பின்னர் 2000 - 2005-ம் ஆண்டு வரை, பர்ஹர்வாவை மையமாக வைத்து, தனது கணவரோடு பிராந்தியப் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

பின்னர் 2005-2009-ம் ஆண்டு வரை செராம்பூர் இறையியல் கல்லூரியில் உயர்கல்வி பயின்றார்கள். 2009-ம் ஆண்டு மீண்டும் இவர்கள் குடும்பமாக மால்தோ மக்கள் மத்தியில் மண்டலப் பொறுப்பேற்று ஊழியம் செய்தார்கள். அதன்பின் இவர்கள் லூர்தியானாவை மையமாக வைத்து, ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் 2015-ம் ஆண்டு வரை ஊழியம் செய்தார்கள்.

இவரது கணவர் 60 வயதைக் கடந்தவுடன், தமிழ்நாட்டிற்கு மாற்றம் பெற்று, மேட்டுப் பாளையத்தை மையமாகக் கொண்டு இவர்கள் விரிவுப்பணியாற்றி வந்தார்கள். இதற்கிடையில் திருமதி. சாந்தி அவர்கள், சில வருடங்களாகவே நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்தார்கள். காலப்போக்கில் இவரது இரு சிறுநீரகங்களும் பழுதடைந்தமையால், இவரது கணவருடைய ஒரு சிறுநீரகம் இவருக்குப் பொருத்தப்பட்டது. கடந்த வருடம் வாயில் ஏற்பட்ட ஒருவிதத் தொற்றுநோயால் இவர் கோயம்புத்தூரிலுள்ள ஒரு மருத்துவ மனையில் அதற்காகச் சிகிட்சை பெற்று வந்தார். இதற்கிடையில், நவம்பர் 2020-ல் இவருக்குக் கொரோனா தொற்றும் இருப்பது கண்டறியப்பட்டது. எனவே, இவர் வேலூரிலுள்ள கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனையில் சிகிட்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மென்மேலும் பலவிதமான நோய்களினால் இவர் பாதிக்கப்படவே, கடந்த 45 நாட்களாகத் தீவிர சிகிட்சைப்பிரிவில் சிகிட்சை பெற்று வந்தார். கடந்த மே 3-ம் தேதி 2021-ம் ஆண்டு, காலை 8.15 மணியளவில் சிகிட்சை பலனின்றி, இவர் இவ்வுலக ஓட்டத்தை முடித்தார். இவரது சரீரம், ஈரோட்டிலுள்ள CSI பிராப் திருச்சபையின் கல்லறைத் தோட்டத்தில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு நல்லடக்கம் செய்யப்பட்டது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குடும்பமாக, திருமதி. சாந்தி ஆனந்தராஜ் அவர்களுடைய அர்ப்பணிப்புள்ள வாழ்க்கைக்காகவும், ஊழியத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவன்தாமே அவரது கணவர் அருள்திரு. ஆனந்த்ராஜ் அவர்களையும், அவர்களது மூத்த மகன் குடும்பத்தையும், இளைய மகனையும் ஆற்றித்தேற்றி பெலப்படுத்துவாராக!

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**சகோ. மோகன்** (1988 - 2021)

சகோ. மோகன் அவர்கள், 1988-ம் ஆண்டு ஜூன் 15-ம் தேதி, தர்மபுரி மாவட்டத்திலுள்ள நாயன்டஹள்ளி கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத பெற்றோரான திரு. ராமன் மற்றும் திருமதி. முனியம்மா ஆகியோரின் மகனாகப் பிறந்தார். இவருடைய தாய் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதால், சகோ. மோகனுக்கு வேதாகமத்தை ஒழுங்காக வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது, தேவஆவியானவர் இவரோடு இடைபடவே, இவரும் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். ஆதலால், இவர் தனது தாயாரோடுகூட அருகாமையிலுள்ள தேவாலய ஆராதனையில் கலந்துகொண்டு, கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து வந்தார்.

ஒருசமயம் இவர் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, யோவான் 12:25-26 வசனங்கள் இவரை ஆண்டவருக்கு முழுநேர ஊழியம் செய்ய வழிநடத்தியது. ஆதலால், இவர் அநேக மிஷனெரிகளின் வாழ்க்கை சரிதைகளை வாசிக்கலானார். அதன் விளைவாக, இவர் தனது நண்பர்களோடு இணைந்து மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துரைத்து வந்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 'அறைகூவல்' பத்திரிக்கையை வாசித்து, இவ்வூழியத்தில் 2017-ம் ஆண்டு இணைந்து, மிஷனெரிப்பயிற்சியை முடித்த வுடன் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜீப் ஊழியக் குழுவினரோடு சேர்ந்து பணியாற்றினார். 2019-ம் ஆண்டு குமாரி. அர்ச்சனாவைத் திருமணம் செய்து, உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூர் பிராந்தியத்தில் ஊழியம் செய்து வந்தார். வெகு குறுகிய காலத்திலேயே மூன்று கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, 11 பேரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தி, ஒரு ஆராதனைக்குழுவையும் நிறுவினார்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூர் பிராந்தி யத்தில் கொரோனா தொற்றுநோயின் தாக்கம் அதிகம் காணப்பட்டபோது, அங்கிருந்த சகோ. மோகன் அவர்களும் அந்நோயினால் பாதிக்கப்பட்டார். கடந்த ஏப்ரல் 26-ம் தேதி, அருகாமையிலுள்ள மருத்துவமனை யொன்றில் இவர் சிகிட்சை பெற்று வந்தார். இவருக்கு அந்நோயின் வீரியம் அதிகரிக்கவே, உடனிருந்த மிஷனெரிகள் இவரை ஆரியா என்ற பெரிய மருத்துவமனைக்கு ஏப்ரல் 29-ம் தேதி அழைத்துச் சென்றனர். அங்கும் சிகிட்சை பலனளிக்காமல் போகவே, மித்தி பட்டணத்திலுள்ள ஒரு மருத்துவமனையில் இவர் சிகிட்சைக்காகச் சேர்க்கப்பட்டார். ஆனால் 2021 மே 2-ம் தேதி, இவர் இவ்வுலக ஓட்டத்தை முடித்து, தனது தேவனிடத்திற்குத் திரும்பினார்.

நமது மிஷனெரிகளும், திருச்சபைப் போதகர் களும் சேர்ந்து கான்பூரிலுள்ள கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் இவரது சரீரத்தை நல்ல டக்கம் செய்தனர். தனக்குக் கொடுக்கப்பட்ட குறுகிய காலத்தில் சகோ. மோகன், தன்னால் இயன்றதை இவ்வுலகில் தேவநாம மகிமைக் காகச் செய்து முடித்தார்.

சகோ. மோகன் அவர்கள், மிஷனெரிப் பணியாற்றிய காலங்களில் ஆழமான அர்ப்பணிப்போடும், சகஊழியர்களுடன் தாழ்மையோடும், பணிவோடும் காணப்பட்டார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி அர்ச்சனாவையும், மகன் ஜேசன் ஜெனிஷையும் (8 மாத குழந்தை) தங்கள் ஜெபங்களில் தவறாமல் நினைத்துக் கொள்ளுங்கள்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருமதி. ஜெபஸ்டினா மனோகரன் அவர்கள், கடந்த 15 ஆண்டுகளாகச் சென்னை வடக்கு 2-ம் பகுதியிலுள்ள 'சமாதானம்' ஜெபக்குழு பொறுப்பாளராகக் காணிக்கைகளைச் சேகரித்து உற்சாகமாகச் செயல்பட்டு வந்தார்கள். இவர்கள் கடந்த 10.04.2021 அன்று, தனது 61-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது கணவர் மற்றும் குடும்பத்தினரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.



திரு. B. செல்வராஜ் அண்ணன் அவர்கள், கடந்த 35 ஆண்டுகளாகச் சென்னையிலுள்ள திருவொற்றியூர் பகுதியில் ஸ்கேன் பொறுப்பாளராக நமது இயக்கத்தின் ஊழியத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார்கள். இவர்கள் கிரமமாக ஜெபக்குழு நடத்தியும், காணிக்கைகளைச் சேகரித்தும், மிஷனெரி மற்றும் குழந்தைகளைத் தங்களது உதாரத்துவமான காணிக்கைகளால் தாங்கியும் வந்தார்கள். மிகுந்த அர்ப்பணிப்போடும், அன்போடும் அனைவரையும் அரவணைத்து செயல்பட்டு வந்த இவர்கள், கடந்த 27.04.2021 அன்று, தனது 59-வது வயதில் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இவருடைய அன்பு மனைவி திருமதி. கிறிஸ்டினா, மூத்த மகள், மகனின் குடும்பங்கள் மற்றும் இளைய மகளையும் தேவன்தாமே ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த நம்முடைய ஜெபத்தினால் இவர்களைத் தாங்கிக்கொள்வோம்.



திருமதி. வசந்தா பென்சமின் அவர்கள், கடந்த 40 ஆண்டுகளாகத் திண்டிவனம் ஜெபக்குழுத்தலைவராகவும் தனது கணவர் திரு. பென்சமின் தாமஸ் (திண்டிவனம் பணிமாவட்ட கௌரவ முன்னேற்றச் செயலர்) அவர்களோடு முன்னேற்றப்பணியிலும் கிரமமாக ஊழியம் செய்து வந்தார்கள். கடந்த மாதம் 16.04.2021 அன்று கொரோனாவால் பாதிக்கப்பட்டு, கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவருடைய பிள்ளைகள் மற்றும் கணவருக்காக ஜெபிப்போம்.



திரு. இம்மானுவேல் பீட்டர் அவர்கள், கடந்த 17.03.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் சுமார் 40 குடும்பங்களையும் விசேஷமாக ஸ்கேன் அங்கத்தினர்களையும் சந்தித்து ஜெபித்து காணிக்கை சேகரித்து அனுப்புவதை மிகவும் கிரமமாகச் செய்து வந்தார்கள். தான் அங்கம் வகிக்கும் சீயோன் ஃபெயித் திருச்சபையின் மக்களை மிஷனெரி ஊழியத்திற்காகப் பாரத்தோடு ஜெபிக்கவும், தாங்கவும் உற்சாகப்படுத்தி வந்தார்கள். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி திருமதி. பியூலா, மகள் திருமதி. மெரீட்டா, மருமகன்- திரு. எபநேசர் மற்றும் கல்லூரி முதலாம் ஆண்டு படிக்கின்ற மகள் செல்வி. ஏஞ்சலுக்காகவும் ஜெபிப்போம். தேவன்தாமே இவர்களுக்கு ஆறுதல் தந்து பெலப்படுத்துவாராக!

## ஜூன் 1 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சி ரெங்கநாதன்
திரு. ராம்சிங்பாய் வசாவா
திருமதி. சுகந்தி பெத்துவேல் பர்தன்
திருமதி. ஊர்மிளாபேன் ராம்சிங்பாய்
திரு. வினயராஜ் M.
திரு. வசாவா பச்சியாபாய் பொஹ்னாபாய்
திரு. கமிட் கம்லேஷ் சிங்காபாய்
திரு. போயா தேவுபாய் கங்காஜுபாய்
திருமதி. ரேச்சல் ஜாய்ஸ் பாபு புஷ்பராஜ்
திருமதி. கவித் ஜமுபேன் தேவுபாய்
திருமதி. கிருத்தாஞ்சலி குணசந்திர பயிக்
திரு. வசாவா சுனில் குமார்
திரு. வசாவா ரமேஷ்பாய் உல்சிங்
திரு. போர்சாத் பாபுபாய் சிமன்பாய்
திருமதி. பிரீத்திபாலா பிரதான் பிதுஷ்
திருமதி. சௌமி ஆபிரகாம் தாமஸ்
திரு. ஹோசியல் நாயக்
திருமதி. கொன்கனி பாரதிபேன் திலீப்பாய்
திருமதி. ஜாதவ் சரஸ்வதிபெஹன் போர்சத்
திரு. வசாவா ஆஜுபாய் ராமுபாய்
திரு. போடார் அம்ருத்பாய் பச்சுபாய்
திரு. சுர்கார் ரமேஷ்பாய் ஜோஹுராம்பாய்
திருமதி. ஜெயந்தி கார்த்திகேயன்
திருமதி. லமானி ரத்னா மஞ்ஜ்யா நாயக்
திரு. குமரன் G.
திரு. திம்மண்ணா @ தீமோத்தேயு
திருமதி. ஜெலின் ஜெயபிரதா குமரன்
திருமதி. சுனந்தா குல்கர்னி ராஜா
திரு. ஸ்ரீனிவாசா
திருமதி. மீனாக்கி பீரோ சுனில் தத்தகரா
திரு. வசாவே அர்விந்த் காலுசிங்
திருமதி. தட்வி மனிஷா ஏல்முல்வார்
திருமதி. ஜெயராணி சுகின்லால்
திரு. மஞ்சுநாத் அரேகமார்
திரு. பவார் தினேஷ் இந்தர்பாய்
திரு. கோண்ட் தேவு விஷ்ராம்
திருமதி. ராந்தே லக்ஷ்மிபேன் தேசாய்

# ஜம்மு

### ஆர். எஸ். புரா & அக்னூர்:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளதோடு, முதன்முறையாக 2 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவும் தொடங்கியுள்ளனர். ஆக்ரா சாக்கைச் சார்ந்த 3 குடும்பங்கள் மற்றும் மிரான் சாஹிப் சுவிசேஷத்திற்கு ஆவலுடன் செவிசாய்க்கின்றனர். இம்மாதம் முழுவதும் நடைபெற்ற ஊழிய நிகழ்ச்சிகளில் கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கியிருந்தது. காதர்பூர் கிராம ஜான்வியைப் பக்கவாதத்தி லிருந்தும். ஆக்ரா சாக் கிராம ரேவதி மற்றும் சின்னூர் கிராம குல்சானைக் கண்பார்வை கோளாறிலிருந்தும், கோட் பல்வால் கிராம அன்வரைச் சளிக்காய்ச்சலிலிருந்தும் பூரண குண மடைய தேவன் நல்கிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; இப்பணித்தளத்தில் கர்த்தரை ஆராதிக்கத் தகுந்த இடமொன்று கிடைக்க; ஆக்ரா சாக் கிராம சந்திர கலாவை மூலப்பிரச்சனையிலிருந்தும் ஹிமான்சுவைக் கண்பார்வை பிரச்சனையிலிருந்தும்; சுமனைக் காசநோயிலிருந்தும்; குல்லியன் கிராம காந்தாதேவியைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசிகளான படியல் கிராம சஞ்ஜய், ஆக்ரா சாக் கிராம சந்திரகலா, ரேவதி ஆகியோருக்குத் தகுந்த வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

## ஜூன் 2 புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சாமுவேல் சுப்ரமணி
திரு. சோமாபாய் வாலுபாய்
திரு. பிபாபா பானி, திரு. சுந்தர் துரை
திரு. சுனில் பிரசாத் சிங்
திருமதி. விமலா பீட்டர் பிரபாகரன்
திருமதி. சிவகாமி ஸ்டீபன்
திருமதி. வசாவா சுனிதாபேன் உல்சிங்
திருமதி. நிஷா ஆனந்தன்
திருமதி. ஜோத்ஸ்னா ஜெரால்ட் சேவியர்

### சாம்பா: சுர்கார் ரமேஷ்பாய் & கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்

**துதிக்க:** சம்பலா, சுரேன்சார் மற்றும் ராஜ்புரா கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தியைக் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். சங்வாலி கிராம நமது விசுவாசி ஜோதிதேவிக்கு மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. சுரேன்சார் கிராம கங்காதேவியைப் பொல்லாத ஆவியின் பிடியினின்று தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான ஆஷா, ராகுல், சோனியா, கங்கா, நேஹா மற்றும் சாரிலால் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடவும், ஆவிக்குரிய வாழ்வில் நல்வளர்ச்சிக் காணவும்; சம்ப் கிராமத்தில் ஒரு ஆராதனை மையம் அமைக்கப்பட; சாம்பா மற்றும் சுரேன்சார் கிராம விசுவாசிகள் அனைவரும் தங்களது விசுவாசத்தில் மேலும் உறுதிப்பட; ரெட்டியா கிராம விதராம் சந்த், சங்வாலி கிராம சாம்ஷர் ஆகிய நமது சபை மூப்பர்கள் சபை ஆராதனைகளை நேர்த்தியாக நடத்த; மங்குசிக் கிராம சுனில்குமாரைக் காசநோயிலிருந்தும், நுட் கிராம மது தேவியை மனநோயிலிருந்தும், ஜத்வால் கிராம செரிலாலை இருதயக் கோளாறிலிருந்தும் மற்றும் ஷாத்மங்கா கிராம தீபக்குமாரை ஆஸ்துமா வியாதியிலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** முதன்முறையாக 7 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. அதில் 6 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். ஊரடங்கி னிமித்தம் சிறுவர் ஞாயிறு பள்ளி ஆராதனையை நிகழ்நிலை மூலம் சிறப்பாக நடத்த தேவன் ஒத்தாசை புரிகிறார். நமது சுதேச ஊழியரான கும்பதாஸின் மகள் பிரியங்கா தனது 11-ம் வகுப்பு முழுஆண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சிப் பெற்றுள்ளார். நமது விசுவாசி ரீனா தனது வீட்டைச் சிறந்தமுறையில் கட்டிமுடிக்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது வாழ்வாதாரத் தேவைகளைச் சந்திக்க நமது விசுவாசி களான அசோக், முகேஷ் மற்றும் கமலுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; நமது விசுவாசி விமலாவின் கணவர் சாந்தாராம் தனது குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து காசாபேட் கிராம விமல், நெஹ்ரா கிராம விமலா, தாக்லேக் கிராம நேஹா, கரலி கிராம ராம்கு மற்றும் மன்பகதூர் விடுதலை பெற; கோவிட்-19னிலிருந்து ராம்காளி மற்றும் ஞகாவிற்கு நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜூன் 3 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குளோரி ராபர்ட் ராஜலிங்கம்
திரு. எட்வர்ட் சாம், திரு. வேடியப்பன் L.
திரு. பால் டேனியேல், திரு. விஜயகுமார் K.
திருமதி. ரஷ்மித்தா பரிடா வில்சன்
திருமதி. ரூபா குமாரி பிரசாந்த்
திருமதி. ஏசுமணி மயில்சாமி
திரு. ஆஷாபிராப்தா, திரு. பாலமுருகன் V.
திருமதி. அந்தோணி ராஜம் ஜெரோம்
திருமதி. வால்வி எஜூ காலுசிங்

### தானேதார்:

**உம் பியாக் லால் & நியாங்கான் மான்**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். கிங்கால் கிராம நமது விசுவாசிகளான விக்ரம் மற்றும் பாராவின் திருமணம் கிறிஸ்தவ முறையில் சிறப்பாக நடந்தேறியது. மனத்தளர்வு மற்றும் கையெலும்பு முறிவிலிருந்து தேவன் சந்திரனைக் குணமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜங்கோலி, கான்ச்கட்டி மற்றும் சமேலா பகுதிகளில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட; இந்த நிதியாண்டில் இப்பணித் தளத்தைச் சார்ந்த அனைத்து கிராமங்களிலும் நற்செய்தியைப் பரவச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்திருக்கும் திட்டத்தை தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க; கிங்கால் பகுதியிலுள்ள நமது புதிய தொடர்பாளர்களான மீனா தைராய்டு பிரச்சனையிலிருந்தும், பூஜா பக்கவாதத்திலிருந்தும், பிரியன்சி பொதுவான பெலவீனங்களிலிருந்தும் முற்றிலுமாகக் குணமடைய ஜெபிப்போம்.

# பஞ்சாப்

### பட்டிண்டா:

**கிருபா ரக்ஷனா பரே & ஷகினா**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களை நமது ஊழியர்கள் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். மேலும் புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மண்டிகோலா துணைமையத்திலிருந்து ஒரு குடும்பமும், பாய் ரூபா பகுதியிலிருந்து 4 குடும்பங்களும், மௌர் மண்டி துணை மையத்திலிருந்து 2 குடும்பங்களும் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். நமது விசுவாசிகளின் பிள்ளைகள் தங்களது கல்வியாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர் மற்றும் தவறாது நமது ஆராதனைகளில் வந்து பங்கேற்கின்றனர். மௌர் காலா கிராம 2 வயது சிறுவன் பால் மசிஹைச் சரீர வீக்கத்திலிருந்தும், மண்டிகோலா கிராம குர்பிரீத் கௌரை நெஞ்சு கட்டியிலிருந்தும், பங்கர் கிராம ஜாவீந்தர் கௌரைத் தீராத முதுகு வலியிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காந்தபானா கிராம ஜஸ்பல் சிங்கை வயிற்றுக்குடல் தொற்றுக் கிருமியிலிருந்தும், பாய் ரூபா கிராம நீலம் தேவியைக் கல்லீரல்கட்டி பிரச்சனையிலிருந்தும், மண்டிகோலா கிராம ராஜ்வீர் சிங்கை மனவளர்ச்சியின்மையில் இருந்தும், மைசர்கானா கிராம ஜுகுனா சிங்கை நெஞ்சு வலியிலிருந்தும், மௌர் காலா கிராம சுக்பால் சிங்கை இரத்த அணு கோளாறிலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஜூன் 4 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கராடோ பிஸ்வோ ரஞ்சன்
திருமதி. ஜெமிமா ஜெபராணி டேனியேல் டேவிட்
திரு. எபி ஞான செலின், திரு. ஜீவர் ஜோஸ்வா
திருமதி. வசாவா நீட்டா குமாரி வசாவா ஆஜுபாய்

### மோகா:

**ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். அதிகமான ஜெபம் மற்றும் நல்லாலோசனைகளுக்குப் பின், கத்தோ கௌர் மற்றும் ரட்சணா கௌரின் குடும்பங்களில் தேவசமாதானம் ஆட்கொண்டுள்ளது. நமது விசுவாசி அன்தோல் சிங்கிற்கு இருந்த கடன்பிரச்சனை தீர்ந்தது. பெரிய விபத்திலிருந்து ஜாகிர் சிங் காப்பாற்றப்பட்டார். ஃப்ராஜ் சிங் மற்றும் ரேகா கௌரைக் கண்பார்வை கோளாறிலிருந்தும், ஹர்ஜித் கௌரை மூக்கிலிருந்து வரும் இரத்தப் பிரச்சனையிலிருந்தும், பூஜாவைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் தேவன் சுகமாக்கினார். போரா சிங் மற்றும் பூஜாவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்தைக் கிருபையாய்த் தொடர; அஜித்வால், சட்சாக், ராய்காட், கோட்லி, தரம்கோட், போபாரா, பிந்தர்கலன், சிதக் மற்றும் துடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; அனைத்து விசுவாசிகளும் ஆராதனைகளில் பங்குப்பெற; நமது புதிய தொடர்பாளர்களான மன்பிரீத் சிங், லத்தி சிங், ஹரன், கலா, சிண்ட்டோ மற்றும் மிண்ட்டு குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; நமது விசுவாசிகளான ரஜினி கௌர், ஜோதி, காஞ்சல் மற்றும் ஆமானிற்கு நல்ல வாழ்க்கைதுணைகளமைய; வீரா கௌரின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் பப்லி கௌர், ஆர்த்தி, மது, சன்னி, ஜஷ்வர் சிங் மற்றும் ஜஷ்பிரீத் கௌர் யாவரும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### பர்னாலா:

**கிருபா ரக்ஷனா பரே & ஷகினா**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் இயேசுவின் அன்பைப் பறைசாற்றியுள்ளனர். 10 நபர்கள் முதன்முறையாகக் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். தனுவாலா துணைமையத்தைச் சார்ந்த சந்தீப் வாய்ப்பேசாமையிலிருந்து அற்புத சுகம் பெற்றப்படியால், ஒரு திருச்சபையே இப்பகுதியில் உருவாக தேவன் கிருபை ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இருசக்கர வாகன விபத்தினாலுண்டான காயத்திலிருந்து குர்பிரீத்தையும், சிறுநீரகக் கோளாறிலிருந்து நீலத்தையும், மனச்சோர்பிலிருந்து பிந்தர் கௌரையும் மற்றும் நெஞ்சு வலியிலிருந்து மஞ்சுவையும் தேவன் குணமாக்க; சில மாதங்களாகவே காணாமல் தொலைந்து போயிருக்கும் அல்லாஜித் மற்றும் சந்துருதேவி மீண்டும் சுகப்பத்திரமாக வீடு வந்து சேர ஜெபிப்போம்.

ஜூன் 5 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சாந்த குமார் சுதாகரன்
திரு. இப்ராயிம் மாலி, திரு. மயில்சாமி ஜோசப்
திருமதி. பியூலா சுலோச்சனா ஜாஷ்வா
திரு. சிவசங்கரன் @ ஜெபசீலன்
திரு. ஏல்முல்வார் சுவப்னில் ராமலு
திருமதி. ராம்புரம் பெடக்கா மேத்யூ
திரு. நரேந்திர குமார், திரு. சங்கர் A.

# ஹரியானா

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றியுள்ளதோடு, முதன்முறையாகக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் 7 நபர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். தபாவளி பகுதியில் பான்சி மற்றும் ரவிகுமாரின் திருமணம் கிறிஸ்தவ முறையில் இனிதே நடந்தேறியது. தபாவளி ஆலய ஆராதனைக்கு 3 குடும்பங்களும், சாந்த் நகர் துணைமைய ஆராதனைக்கு ஒரு குடும்பமும் தவறாமல் வந்து கலந்து கொள்கின்றனர். தீய ஆவியின் பிடியிலும், குடிப்பழக்கத்தின் பிடியிலும் சிக்குண்டு இருந்த சிர்சா கிராம தேவேந்தர் சிங் மெஹ்தாரை தேவன் விடுவித்தமையால், அவரும் அவரது குடும்பமும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். சிர்சாவில் சிறியளவில் வேதாகம வகுப்பொன்று துவங்கப்பட்டுள்ளது. நமது விசுவாசி சுரேஷின் மூலம் அவரது சகோதரி சந்தோஷி மற்றும் அவரது சகோதரியின் கணவர் உமேஷும் கிறிஸ்தவ விசுவாசத் திற்குள் வந்திருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிர்சாவில் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் ஒரு குடும்பத்தில் அனைவரும் இரட்சிக்கப்பட; தர்ஜனின் குடும்பத்தில் தேவசமாதானம் நிழலிட; சௌர்கார் கிராம ரேகா மற்றும் கவிதா, மண்டி தபாவளி கிராம நேஹா ஆகியோருக்கு நல்ல சுகப்பிரசவங்கள் நேரிட; தபாவளி, சாந்த் நகர், ரணியா மையங்கள், சிர்சா பகுதி யாவிலும் நமது ஊழியம் இன்னும் விரிவடைய; கோவிட்-19னால் ஊழியம் செய்ய இயலாதவாறு தடைபட்டிருக்கும் கிராமங்களில் வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

## தோஷம்:

### ஜாண் டேவிட்சன், சிவகுமார்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவண்டை சேர்ந்துள்ளனர். பூலின் மகள் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றாள். பலவாஸ் கிராமத்தில் வசிக்கும் ஓட் சமுதாயத்தினர் மத்தியில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசலை தேவன் தந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கபிலைத் தீராத வியாதியிலிருந்தும், கிராவர், சுமன் மற்றும் ரவீந்தரைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், தீபிகாவை மாரடைப்பிலிருந்தும் தேவன் சுகமாக்க; கோவிட்-19னின் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்குட்பட்டு சுவிசேஷ ஊழியம் செய்ய தேவஞானமும் அறிவும் ஊழியர்களுக்கு தேவன் அருள ஜெபிப்போம்.

## ஜூன் 6 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. உதிப்த குமார் பாக்
திருமதி. ஷியாமளா ஷாமினி மேத்யூ
திருமதி. புஷ்பம் மகேந்திரன்
திருமதி. புக்யா ஜான்சிபாய்

### கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளதோடு, 5 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். பன்வாலா மற்றும் ஷெர்கார்காய் கிராமங்களில் நடந்த வாலிபர் கூடுகைகளையும், வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளையும் தேவன் மிகச் சிறப்பாக ஆசீர்வதித்துத் தந்தார். தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் மீனாக்ஷியை விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாரு குடும்பத்தினரின் இரட்சிப் பிற்காக; கோவிட்-19னிலிருந்து நமது விசுவாசிகளும் குறிப்பாக அந்நோயின் அறிகுறிகளோடு காணப்படும் ஜக்மல் வாலி கிராம நமது புதிய விசுவாசிகளான ஜஷ்வந்த் மற்றும் சுக்கோவும் கர்த்தரால் பாதுகாக்கப்பட; சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் நமது புதிய தொடர்பாளர்களான சோனு, பிரதீப் ஆகியோரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## உத்தரகாண்ட்

### மல்தன்சோர்: ஷிஷுபால் & அனிதா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ நறுமணம் வீசியுள்ளது. நமது ஊழியத் திற்கு ஒரு புதிய தன்னார்வ ஊழியர் கிடைத்துள்ளார். நமது விசுவாசிகளுக்குத் தங்களது விவசாயத்தொழிலில் தேவன் நல்ல அறுவடையைத் தந்தார். கர்ப்பப்பை தொற்றிலிருந்து தேவன் ஜானகி மற்றும் தாராதேவியைச் சுகமாக்கினார். போகாபுரம் கிராமத்தில் நடக்கும் நமது ஆராதனையில் புதிதாகப் பல குடும்பங்கள் வந்து பங்குப்பெறுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போகாபுரம் கிராமத்தில் நடந்துவரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் சிறப்பாக முடிய; மோகன் நகரில் விசுவாசிகளின் மீது பொய்க்குற்றச்சாட்டு கூறி அல்லலுறச் செய்யும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்ப; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் பால்தேவ், சிந்தர் ஆகியோரின் மனமாற்றத் திற்காக; தாரி கிராமத்தில் ஆலயக்கட்டு மான நிலத்திற்கான பிரச்சனை சுமூகமான தீர்வுக்கு வர ஜெபிப்போம்.

## *கோவிட்-19னை மேற்கொண்ட கிருபை!*

*புதுடெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தளம், நமது ஊழியம் பெருமளவு செய்யப்பட்டு வந்த குடிசை வாழ்மக்கள் பகுதி, ஏராளமான ஜனத்தொகைக் கொண்ட மிக நெரிசலான இடமானதால், கொரோனா தொற்றுநோய்க்கிருமியினால் அதிகமான பாதிப்பிற்குள்ளானது. அநேகர் அத்தொற்றுநோய்க்கு ஆளாயினர். நமது விசுவாசிகளின் 3 குடும்பங்களிலிருந்து 7 நபர்களுக்கு இத்தொற்றுநோய் உறுதியானது. நமது ஊழியர்கள் இவ்விசுவாசிகளுக்காக நிகழ்நிலை கூட்டு ஜெபம் மற்றும் அலைபேசி கூட்டிணைப்பு அழைப்பு ஜெபம் இவைகளின் மூலம் இடைவிடாது ஊக்கமாக ஜெபிக்கத் தொடங்கினர். ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும் தேவன், அவருடைய மகத்தான கிருபையினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்த சகோதரி. நிஷா பல்கிஷோர் மற்றும் பாண்டிமாதேவியைத் தொட்டு சுக மாக்கினார். கர்த்தருக்கே மகிமை!*

## ஜூன் 7 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் கருணாகரன்
திருமதி. டெய்ஸி இஸ்ரேல் டேனியல்
திரு. மாணிக்கம் P., திரு. ரவி S.
திருமதி. கமித் சாருபேன் கம்லேஷ்

# டெல்லி

### பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரைத் தங்களது சொந்த இரட்சகரென அறிக்கை செய்துள்ளனர். கோவிட்-19னிலிருந்து ஜீவா, நிஷா பல்கிஷோர், சௌரப், குட்டி மற்றும் ராம்ராஜ் குடும்பத்தை தேவன் சுகமாக்கினார். இத்தொற்றுக்கால ஊரடங்கினிமித்தம் ஞாயிறு ஆராதனையை நிகழ்நிலை மூலம் நடத்த தேவன் உதவி செய்து வருகிறார். குடும்பப்பிரச்சனைகளின் நிமித்தம் ஆலய ஆராதனைக்கு வராமல் விலகியிருந்த நமது விசுவாசிகள் மீண்டும் திருச்சபைக்கு வரத் தொடங்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது மனைவி விமலாவை இழந்து தவிக்கும் கோபால் மன ஆறுதலடையவும், விசுவாசத்தில் வளரவும்; கிர்தான்சிங், ஹேமந்த், இஷாவைக் காசநோயிலிருந்தும், சோனாலி, தீபா, பிரேமாவைத் தைராய்டு பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்க; தங்களது வேலைகளை இழந்திருக்கும் நமது விசுவாசிகளான நிஷா, அனிதா, கீதா சங்கர் மற்றும் ரீட்டாவிற்கு இந்த ஊரடங்குக் காலங்களில் வாழ்வாதாரத் தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு தேவன் இவர்களுக்கு வழிவாய்ப்புகளை உண்டுபண்ணித் தர; எக்தாவின் குடும்பத்தில் தேவசமாதானம் தங்கியிருக்க; சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுவோர் தங்களது விசுவாசத்தைத் தைரியமாய் அறிக்கை செய்ய ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

### உதய்பூர்:

### சுனில் குமார் வசாவா & மீனாக்ஷி

**துதிக்க:** ஷேரா, பிப்பள்வாஸ், ஒடவாடா, கேகத் ஆகிய கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் அன்பு நற்செய்தியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிக வருட ஜெபத் திற்குப்பின் பெரிக்பேன், மனிஷா, பாருபேன் மற்றும் மஞ்சுளாவிற்குக் குழந்தை பாக்கியங்கள் அருளப்பட்டுள்ளன. கிரண், மல்கிபேன் மற்றும் ஷர்மிளாபேன் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். லக்ஷ்மிபாயைச் சிறுநீரகக் கோளாறிலிருந்து தேவன் சுகமருளி விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெக்கான்பாடா கிராம திருச்சபையினரைக் கள்ள உபதேசங்களால் திசை திருப்புவோர் மனம் மாற; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் 20 குடும்ப மக்களின் இரட்சிப்பிற்காக; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் எதிர்ப்பைச் சந்திக்கும் நமது விசுவாசி பிரகாஷ்பாயிற்காக; விசாலா கிராம ஆலயக்கட்டுமானப்பணி சுமூகமாக முடிய; காசநோயிலிருந்து பாபுலால் சுகம் பெற ஜெபிப்போம்.

ஜூன் 8 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் சுந்தர் சிங், திரு. தீப்திலால் மாலி
திருமதி. திலகவதி நாகராஜன்
திருமதி. சௌந்தர்ய ரேகா வியாசு பாபு

## ஸ்ரீ கங்காநகர்:

**V. குமார் & பெட்ரிஷியா**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 2 குடும்பங்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். தீவானா கிராமத்திலிருந்து கலா சிங் மற்றும் வீர் கௌரையும், SSB காலனியிலிருந்து ராஜு மற்றும் ரூபியையும், கபீர்தாஸ் நகரிலிருந்து சந்திரா, அபிஷேக் மற்றும் தீபக்கையும், 2 FD கிராமத்திலிருந்து சந்தீப் குடும்பத்தையும் தேவன் நமக்குப் புதிய தொடர்பாளர்களாக ஊழியத்தில் தந்துள்ளார். குருசார் 2 W கிராம ஷாலு வேதாகமத்தை வாசிப்பதோடு, நமது ஆராதனையில் தொடர்ச்சியாகக் கலந்து கொள்கிறார். ஹக்கும் சிங்கின் குடும்பம் புதிதாகச் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கஜ்சிங்பூர் கிராம அபினாவ் லாலிற்கு நல்ல வாழ்க்கைதுணையமைய; கலா சிங் & வீர் கௌர் தம்பதியருக்குக் குழந்தை செல்வம் கிடைக்க; 3 LL கிராம சுமன் மற்றும் குருமுக்கின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## ராஜஸ்தான் பிராந்திய அலுவலகம்:

**அமிர்காந்த் டிகல் & நிரோலா**

**துதிக்க:** 4 கிராமங்களில் முதன்முறையாகச் சுவிசேஷ நற்செய்தியின் நறுமணத்தைப் பரப்பியுள்ளதோடு, புதிதாக 21 நபர்களைக் கிறிஸ்துவின் விசுவாசத்திற்கு நேராக வழிநடத்தியுள்ளனர். 27 இடங்களில் நடைபெற்ற மாலைநேர ஜெபக்கூடுகைகளையும், 33 இடங்களில் நடைபெற்ற ஊழியப் பின்தொடர் பணிகளையும், 23 இடங்களில் நடைபெற்ற வேதாகம வகுப்புகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்த அநுகூலமற்ற காலச் சூழ்நிலையில் விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் மேலும் பலப்பட; நமது விசுவாசிகளே தங்களது சொந்த இனமக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துரைக்க; சுவிசேஷத்தைத் தங்கள் வாழ்வில் கேட்டிருக்கும் நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கையிட; ஆண்கள், பெண்கள் மற்றும் வாலிபப்பிள்ளைகள் மத்தியில் தொடர்ச்சியாக வேதாகம வகுப்புகள் நடத்தப்பட; திருச்சபை ஆராதனைகளை அந்தந்த சபைமூப்பர்கள் உற்சாகமாக எடுத்து நடத்த முன்வர ஜெபிப்போம்.

## *1000 கொண்டு வந்த ஆயிரங்கள்!*

*பஞ்சாப், பர்னாலா பணித்தளம். இவ்வருடம் கடந்த பிப்ரவரி 17-ம் தேதியிலிருந்து ஏப்ரல் 4-ம்தேதி வரை 40 குடும்பங்கள் சேர்ந்து ஊக்கமாக 1000 மணி நேர ஜெபத்தைச் செய்தனர். அதன் விளைவு, அனைத்து நமது விசுவாசிகளும் தங்களது விசுவாசத்தில் பெலப்பட்டு, சரீரத்திலும் மனதளவிலும், தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் விபத்துக்களினின்றும் பாதுகாக்கப்பட்டு, அற்புதத்தின் மேல் அற்புதம் ஆயிரமாயிரமாய் தங்கள் வாழ்வில் நடக்கக் கண்டார்கள். ஆம்! தேவகரம் தங்கள் வாழ்வில் செயல்படுவதை நன்கு அறிந்துணர்ந்தார்கள். தேவனுக்கே மகிமை!*

## ஜுன் 9 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கோயில் புஷ்பம் பால்ராஜ்
திருமதி. ஜோஸிலா சுந்தரிபாய் பென்ஹர்
திருமதி. செல்வம்மாள் செல்வராஜ்
திருமதி. சகரிகா பிரதான் பரிச்சா

# உத்தரப் பிரதேசம்

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. ஃப்ரோஜோபாத்தில் நடந்த பெண்கள் கூடுகையையும், தனுமாயில் நடந்த விசுவாசிகள் கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். புபேந்திரா, சஞ்ஜய் மற்றும் நிலேஷின் குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டு கின்றனர். புதிதாக அநேகர் திருச்சபை ஆராதனைகளில் வந்து கலந்து கொள்வதோடு, வேத வசனத்தையும் ஆர்வமுடன் கேட்க தேவன் கிருபை பாராட்டுகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குன்பாய் கிராம ராஜ்பகதூர் மற்றும் கௌரிசங்கர் குடும்பங்களின் இரட்சிப்பிற்காக; நாக்லா கல்யாண், குன்பாய் ஆகிய கிராமங்களில் மாலைநேர ஜெபக்கூட்டங்கள் துவங்க; வெளிசந்திப்பு ஊழியங்கள் நடைபெற தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** தில்காய், குக்ருஹோக்ரு, ரமாபூர், ரெயில்வே காலனி, பாஹ்ராய்ச் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள், ஊழியப் பின்தொடர்பணிகள் மற்றும் சிறிய ஜெபக்கூட்டங்களை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். வருகிற கல்வி யாண்டிற்கான பாடப்புத்தகங்களை 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு நமது விடுதி மாணவர்கள் கிடைக்கப் பெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் ரமாபூர் மற்றும் தர்வாகுளம் கிராமங்களில் வசிக்கும் நமது விசுவாசிகளின் குடும்பங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கும் நட் மக்களின் சமுதாய மேம்பாட்டிற்காக ஜெபிப்போம்.

### ஜாலவ்ன் : திலக் & எமிமாள்

**துதிக்க:** ரணியா, ஜக்கா, ஹர்சிங்பூர் ஆகிய கிராமங்களில் முதன்முறையாகச் சுவிசேஷம் பரவியுள்ளது. தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து சஞ்சு, சீலு, மனோரமா, ரஜினி, அவிலாஷா மற்றும் தேவுசிங் விடுதலை பெற்றுள்ளனர். கொடியா மற்றும் மங்ரோலில் சிறிய ஜெபக்குழுக்கள் கிரமமாக இயங்கி வருகின்றன. தீராத தலைவலியிலிருந்து சிபி அற்புத சுகம் பெற்றதால், அவருடைய முழுக்குடும்பமும் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்ட தேவன் ஒத்தாசை புரிகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்திருக்கும் நமது பரிகாபூர் கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்தைத் தொடர; பாவ்லி, உம்ரி, இன்குரி, பகத்பூர் ஆகிய இடங்களிலுள்ள நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய நல்வளர்ச்சிக்காக; நமது சுதேச ஊழியர் களான பல்வான் சிங் மற்றும் ராஜ் குமார் மீண்டும் திரும்பி வந்து உற்சாக மாக ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

## ஜூன் 10 வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பால் ரவி ராஜ், திரு. தாமஸ் R.
திரு. நாகராஜன் M., திரு. வினோத் குமார்
திருமதி. ராஜேஸ்வரி பிரதான் சம்புநாத்
திருமதி. நேத்ரவதி முத்துக்குமார்
திரு. ஹெபல் குமார், திருமதி. பாலின் மேரி

### புந்தேல்கண்ட் பிராந்தியம்:

**N. ராஜதுரை & பிரேமா**

**துதிக்க:** நமது விசுவாசிகளான மோத் பணித்தள சாந்தி பாலின் குடும்பம், கடௌரா பணித்தள வினோத்குமாரின் குடும்பம், குணா பணித்தள மோகன், சுர்பான், கமலாபாய் பாப்புவின் குடும்பம், தப்ரா பணித்தள முகேஷ், நமது ஜீப் குழுவைச் சார்ந்த மனோஜ் குடும்பம் ஆகியவர்களை தேவன் பல்வேறு வியாதிகளிலிருந்து விடுவித்தார். ஜாலவ்ன் பணித்தள ஷீலுவை வலிப்பு நோயிலிருந்தும், தீய ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் விடுவித்து சுக மாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த 15 நாட்களுக்குள்ளாகத் தங்களுக்கு அருமையானவர்களைக் கோவிட்-19னால் இழக்கக்கொடுத்து கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் நமது ஜான்சி, CNI திருச்சபை விசுவாசிகளின் குடும்ப மக்களுடைய மனஆறுதலுக்காக; நமது விசுவாசிகள், சபை மூப்பர்கள் தன்னார்வ ஊழியர்கள், சுதேச ஊழியர்கள், மிஷனெரிகள் யாவரையும் தேவன் தமது ஆரோக்கியமான செட்டைகளின் மறைவில் வைத்துப் பாதுகாக்க; இத்தொற்றுநோய்க் காலங்களில் புதிய முறைகளில் கர்த்தருடைய பணியைத் தொய்வின்றிச் செய்ய தேவன் அவரது ஞானம் புத்தியை நமது ஊழியர்களுக்கும், சுதேச ஊழியர் களுக்கும், விசுவாசிகளுக்கும் அருள ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### நிவாலி:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** முதன்முறையாக 5 கிராமங் களில் சுவிசேஷத்தின் ஜீவவாசனை பரவியுள்ளது. அநேக இடங்களில் நடத்தப்பட்ட விசுவாசிகள் கூடுகை, பஜன் கூடுகைகள், உபவாச ஜெபக்கூடுகைகள் யாவையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். பப்லுபாயைக் குடற்புண் காய்ச்சலி லிருந்தும், சோபாராம் மற்றும் காஜா குடும்பங்களின் அங்கத்தினர்களை வைரல் தொற்றுநோயிலிருந்தும் தேவன் பாதுகாத்து சுகப்படுத்தினார். கம்பானி கோரிராம் என்ற பகுதியிலிருந்து ஒரு புதிய குடும்பம் சுவிசேஷத்தின் மீது நாட்டம் கொள்ள தேவன் கிரியை செய்து வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19னின் நிமித்தம் மரணத்தைத் தழுவிய கோக்காரி மற்றும் கோலாபானி ஆகியோரது குடும்ப மக்களின் மனஆறுதலுக்காக; சிறு தொழில் செய்யும் நமது விசுவாசிகளின் வாழ்வாதாரத் தேவைகள் இத்தொற்று நோய்க் காலங்களில் பாதிப்புக்குள்ளாகாம லிருக்க; வேலைகளினிமித்தம் புலம் பெயர்ந்து செல்லும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## ஜூன் 11 வெள்ளி

### பன்சேமால்:
**வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** காலச்சூழ்நிலைகள் சாதகமாக இல்லாதிருந்தும், பலயிடங்களில் ஆராதனைகள் தடையில்லாமல் நடைபெற்றன. குஞ்சியா கிராமத்தில் வைத்து நடைபெற்ற பஜன் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். நமது சுதேச ஊழியர்களான ரத்திலால் மற்றும் திலீப் தீராத நோய்களிலிருந்தும், நமது விசுவாசிகளான தினேஷ் நெஞ்சு வலியிலிருந்தும், கீதா, சுரேஷ், பின்ட்டி, சுவாந்தி மற்றும் மங்களா குடற்புண் காய்ச்சலிலிருந்தும் பூரண சுகம் பெற தேவன் உதவி செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில விசுவாசிகளை மரணத்தின் மூலம் இழந்து நிற்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கு மனஆறுதல் கிடைக்க; அடிக்கடி சுயநினைவின்றி மயங்கி விழும் சுசிலாபாயிற்காக; பொல்லாத ஆவியின் பிடியில் சிக்கித் தவிக்கும் ரேவுத் குடும்பம் விடுதலையடைய ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### புயன் ஊழியம்:
**ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை விசுவாசத்துடன் நுகர்ந்துள்ளனர். 2 மாலைநேர ஜெபக்கூடுகைகள், 2 இயேசு திரைப்படக்காட்சி நிகழ்ச்சிகள் யாவையும் சிறப்புடன் நடத்தி முடிக்கவும், புதிதாக 29 நபர்களுக்குச் சுவிசேஷம் கூறிடவும் தேவன் கிருபை செய்தார். நமது சுதேச ஊழியர் ரமேஷ் பற்பல சுகவீனங்களிலிருந்து சுகம் பெற்றார். நமது சுதேச ஊழியர்களுக்கான வேதாகமப்பயிற்சிக் கையேடுகளை மொழிப்பெயர்ப்பு செய்யும் பணியைத் துவங்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் கின்னு ராய் இரட்சிக்கப்படவும், அவரது மகளுக்கு இருக்கும் புத்தி தெளிவற்ற தன்மை சுகமாகவும்; புயன் சமுதாயத்தினர் மத்தியில் இயேசு திரைப்பட ஊழியமுறை சுவிசேஷம் அறிவிப்பதற்கு மிகவும் ஏற்புடையதாக இருப்பதால், அவ்வூழியத்திற்கான உபகரணத் தேவைகள் சந்திக்கப்பட; முஞ்சியாதேவி மற்றும் கோடு ராயின் குடும்பங்கள் யாவும் இயேசுவை அறிந்திட; கெய்ரசால் கிராமத்தில் வாழும் இரண்டு குடும்பங்கள் கிறிஸ்துவின் அன்பைப் பெற்றிட; சுவி சேஷ எதிர்ப்பாளர்கள் அனைவரும் சந்திக்கப்பட; சாரதி தேவி, சுகுல் ராய், காளிகரண் ராய், பிஷ்ணு ராய், சந்தோஷ் ராய், ராமசந்திரா ராய், சூர்ஜ்யா ராய் மற்றும் தின்ஹாரா கிராம மக்களில் சிலர், இவர்கள் யாவரும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; ஜாரியாபானி கிராம சோனு ராய், தோனி ராய், இத்வாரி ராய் ஆகியோரது குடும்பங்கள் மீண்டும் விசுவாச வாழ் விற்குள் வந்திட ஜெபிப்போம்.

## ஜூன் 12 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மோங்வாய் ஃபோம்
திருமதி. பிரின்சி சாம்பால்
திரு. வசாவா தாமஸ்பாய் குலாப்பாய்
திருமதி. மதுஸ்மித்தா பானி

### கெய்ராஜோடி:

### சுச்சௌ & காம்புங் தாபா

**துதிக்க:** இருமுறை சம்பவித்த கருச் சிதைவிற்குப் பின், நமது விசுவாசி சவுல் மால்தோ மற்றும் ரோஷினாவின் குடும்பத்தில் சுகப்பிரசவத்துடன் குழந்தையைப் பெற்றெடுக்க தேவன் கிருபை ஈந்தார். கல்ஹாஜோர் கிராம மலோத்தியின் மகள், ராணி மால்தோ தனது B.Ed., படிப்பை வெற்றி கரமாக முடித்தார். நமது விசுவாசிகளான பிரவின் மால்தோ, ராபின், ஜெயந்தி மால்தோ, பெஞ்ஜமின் மால்தோ, கம்ரா மால்தோ, சுனிதா, எசேக்கியேல் மால்தோ மற்றும் சோஹித் மால்தோவை தேவன் மலேரியா நோயிலிருந்து சுகப்படுத்தினார். காதி கிராம ஜனார்த்தன் மற்றும் அவரது குடும்பத்தினரின் விசுவாசத்தை தேவன் கனப்படுத்தி, அவர்களின் வியாதிப் படுக்கைகளை மாற்றி போட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெய்ராஜோடி திருச்சபை விசுவாசிகள் ஆராதனைக்குத் தவறாமல் வந்து பங்குப்பெற; தாம்லிகோடா திருச் சபையினர் மாறி மாறி தங்களது ஒவ்வொருவரின் வீடுகளில் வைத்து நடத்தும் ஞாயிறு வீட்டு சபை ஆராதனைக்கு மக்கள் தவறாமல் வந்து கலந்து கொள்ள; கெய்ராஜோடி சபையின் மூப்பரொருவர் தனது தீயப்பழக்கங்களிலிருந்து விடுபட; சாராயம் தயாரிக்கும் மிரியம் மால்தோ, எஸ்தர் மால்தோ, எலியாஸ், சுனில் மால்தோ ஆகியோர் மனம் மாற; சால்கோடா கிராம நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வர; தனது மக்களை ஆராதனைக்குப் போக விடாமல் தடை செய்யும் தௌகோடா கிராமத்தலைவர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 15 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். மதராசி முர்முவைப் பாம்புக்கடியிலிருந்து கர்த்தர் காப்பாற்றினார். தெரசா முர்முவை மலேரியாவிலிருந்தும், மீனா ஹெம்ரோம், ரமேஷ் முர்மு, லிடியா மராண்டி, ராபர்ட் சோரேன் ஆகியோரைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், நத்தானியேல் கிஸ்குவை மூளை மலேரியா வியாதியி லிருந்தும், தலமாய் முர்முவைச் சிறுநீரகக்கல் பிரச்சனை மற்றும் புற்றுநோயிலிருந்தும் தேவன் அற்புதமாகச் சுகப்படுத்தினார். நமது விசுவாசியொருவரின் பிள்ளைகளுடைய திருமணங்களைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் தந்த கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கையிட; வாரந்தோறும் வேதாகம வகுப்புகள் நமது விசுவாசிகளின் வயது வித்தியாசத்திற்கேற்ப தனித்தனியாகத் தவறாமல் நடத்தப்பட; நமது வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலம் அநேகமுறை சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் நமது இத்ஹாரி கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; சிம்பாரா, ஜாக்ரா, ஹரியாலா ஆகிய கிராமங்களில் வாழும் நமது விசுவாசிகள் தங்களது குடிப்பழக்கத்தி லிருந்து முற்றிலுமாக விடுதலை பெற; நமது விசுவாசிகளுடைய பிள்ளைகளின் திருமணங்கள் ஆலயத்தில் வைத்து சிறப்பாக நடைபெற; ஜாக்ரா திருச்சபையினரின் மூப்பர்கள் மற்றும் சபைக்கமிட்டி அங்கத் தினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## ஜூன் 13 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கெடம் ஸ்ரீனிவாச ராவ்
திருமதி. ஜெபராணி ஜாண்சன் சங்கர்
திருமதி. சகரிகா மோகினிமாலா பீரோ

### ராஜ்மஹால் பிராந்தியம்:

### A.R. கின்ஸ்லி & ஷைனி

**துதிக்க:** சுமன் தேவி, ஜகுது புயன், சகிந்தர் புயன், சஞ்ஜய் புயன், வினோத் யாதவ், லீலாவதி தேவி, நந்தேவ் புயன், லவ்கூஷ், ராஜ்குமார் குப்தா, அஜித் உராவ் மற்றும் உபேந்தர் சிங் எனப் பல புதிய தொடர்பாளர்களை தேவன் நமது ஊழியத்தில் தந்துள்ளார். பதாரியா பணித்தளத்தைச் சார்ந்த பெடோ சாப்பேடி கிராமத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசிகளின் மேளாவில் தம்னி, கெய்ராஜோடி, பதாரியா, தாம்ரு ஆகிய இடங்களிலுள்ள விசுவாசிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். தெத்தார்திஹ், சரேன்தாக், தும்பகாடா, ஜாகிபூர், காரிதா, பசிரியகாலா, பத்போவா, ஜமால்பூர், மதன்சாஹி, ஷாரஜ், ஜார்னதோலா, முஸ்தாபூர், தேவ்பூர், பாத்பூடா, ஹோடாய், பொச்சி ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைத்துள்ளது. ஒராவன் சமுதாயத்தைச் சேர்ந்த நமது இரண்டு விசுவாசிகளின் பிள்ளைகள் மனிஷா மற்றும் ராணி நமது இயக்கத்தில் மிஷனெரிகளாக இணைந்துள்ளனர். பிஹாரா, குட்டமு, குண்டாகுடா, ஆடுகுடா மற்றும் தும்ரிகுடா பகுதிகளில் ஆலயக்கட்டு மானப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தண்ணீர்ப் பற்றாக்குறை தீர; சுகார் உராவ், சித்து தூரி, தரோகா புயன், சாம்ரு புயன், பிக்கு புயன், கிசுந்தரி, பினேஷ்வர் உராவ், உபேந்தர் உராவ், பாந்தா புயன் ஆகிய மந்திரவாதிகள் மனந் திரும்ப; எவ்விதத் தடையுமின்றி குட்டமு, குண்டாகுடா, ஆடுகுடா, தும்ரிகுடா, பிஹாரா ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப்பணிகள் யாவும் துரிதமாக நடந்தேறி முடிய; அனைத்து விசுவாசிகள் அதிலும் குறிப்பாக புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், சுவிசேஷத்தைப் பலமுறை பலவிதங்களில் கேட்டிருப்போர் யாவரும் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்யவும்; ஒராவன் மற்றும் குமார்பாக் பஹாடியா மொழிகளில் பாடல் புத்தகங்களும், உரைநடைப் பயிற்சி யேடுகளும் விரைவில் அச்சிடப்பட்டு வெளிவர; இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினால் தங்களது உறவினர்களின் மூலம் உபத்திரவங்களைச் சந்திக்கும் சோனாஜுடி கிராம நமது விசுவாசிகளான சந்தோஷ், ரவிதாஸ், பேபி தேவியின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

### அமரபாடா:

### பென்ஹர் & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** சுவிசேஷத்திற்கான வாசல் திறக்கும் வண்ணமாக 17 கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துத் தந்தார். புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை அறியத் தொடங்கியுள்ளனர். காளிதோஹா கிராமத்தில் வாய்ப்பேச இயலாமல் இருந்த கலாம் முர்முவை தேவன் பேசச் செய்தார். நமது சுதேச ஊழியர் சாமுவேல் மராண்டியை தேவன் பெரிய விபத்தினின்று பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தத்தி கிராம ஆலயக்கட்டுமானப் பணி சுமூகமாக நடக்க; கோவிட்-19னைக் குறித்த விழிப்புணர்வு சந்தால் விசுவாசி களிடையே உருவாக; பகத்பூர், நூனி, சல்பதாடா, பாபுதோஹா, போலிதி மற்றும் ஜம்கானாலி பகுதிகளில் வாழும் மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்காக ஜெபிப்போம்.

## ஜூன் 14 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜோட்ஸ்னா ராணி பானி
திருமதி. லால்மணி டிகல், திரு. குலாம் கிஸ்கு

### மால்பஹாடியா பிராந்தியம்:
**ஹமுவேல் லிம்மா &**
**ரீட்டாஞ்சலி கரடா**

**துதிக்க:** ரூஸ்மலா கிராமத்தில் வைத்து நடந்த பணித்தள மாநாட்டை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார்; அதன் முழுச் செலவுகளையும் நமது விசுவாசிகளே பொறுப்பிலெடுத்து செய்தனர். சீலாஸ் தெகிரி பாம்புக்கடியிலிருந்து பாதுகாக் கப்பட்டார். பிரணி தெகிரி மற்றும் சஞ்ஜய் தெகிரியின் குடும்பத்தில் மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. பணியாபசார் திருச் சபை விசுவாசிகள் தங்கள் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வெளிசந்திப்பு ஊழியநிகழ்ச்சிகளை நடத்தினர். மொகுல் பானியில் வைத்து ஞாயிறு பள்ளி ஆசிரியர் களுக்கான பயிற்சி நடைபெற்றது. புஷ்னா தெகிரி மற்றும் சோமு சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுவதோடு, நமது ஆராதனைகளிலும் வந்து கலந்து கொள் கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாபுரா, மொகுல்பானி, பன்ரகாஸ் ஆகிய பகுதி விசுவாசிகள் யாவரும் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நல்வளர்ச்சிக் காண; நமது சுதேச ஊழியர் மணியின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; சீமாராணி & லாலுதெகிரியின் குடும்பப் பிரச்சனை நீங்கி, சமாதானம் நிலவ; நமது புதிய தொடர்பாளர் திலக் தெகிரி கர்த்தரில் பெலப்பட; நமது ஞாயிறு பள்ளி ஆசிரியர்களான பன்பூதி ராணி, சத்கி குமாரி, காலு தெகிரி மற்றும் பசோந்தி ராணி தொடர்ந்து எல்லா ஞாயிறுகளிலும் ஞாயிறு பள்ளி வகுப்புகளை நடத்த ஜெபிப்போம்.

### சந்தால் சீஷத்துவ பயிற்சி ஊழியம்:
**சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** ரங்கா சிறுமியர் விடுதியிலுள்ள இளம்வாலிபப் பெண்பிள்ளைகளுக்கான 3 நாட்கள் ஆவிக்குரிய கூட்டத்தையும், சோட்டா காகிரி மற்றும் ஜோர்டியில் வைத்து நடைபெற்ற பணித்தள அளவி லான மாநாடுகளையும், வீட்டு ஜெபக் கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். தம்னி ஜோர்திஹா திருச்சபையைச் சார்ந்த நமது சபை மூப்பர் சோனாலா லுக்கு ஏற்பட்ட பெரிய விபத்தில் அவரது நெஞ்செலும்பில் 3 எலும்புகளும் கழுத்து எலும்புகளும் முறிந்து போனபோதிலும், தேவன் அவரது ஜீவனை அருமையாக மீட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாகா ஹெம்ரோமின் இரட்சிப் பிற்காக; புற்றுநோயினிமித்தம் தனது அன்பு மனைவியை இழந்து பரிதவிக்கும் நமது தம்னி ஜோர்திஹா திருச்சபை மூப்பர் சங்கரின் மனஆறுதலுக்காக; தற்போதுள்ள காலக்கட்டங்களில் சுகவீனமாக இருக்கும் நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்காக; தங்களது வேதாகம படிப்பை முடித்துவிட்டு, தங்களது சொந்த இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணித்திருக்கும் ஜோயல் பெஸ்ரா, மைக்கேல் பெஸ்ரா, சுனில் சோரேன் மற்றும் தனது மொழி, கலாச்சாரம் கடந்து பிற மாநில மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணித்திருக்கும் ஸ்டீபன் ஹன்ஸ்தக் ஆகியோரின் அர்ப்பணிப்பை தேவன் கனப்படுத்தித் தர; ரபீந்திர முர்மு & செலினா மராண்டிக்கு மழலை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜூன் 15 செவ்வாய்**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. எனஸ் ஜலின் சந்திரன்
திருமதி. பேபி செலினா அருள்ராஜ்
திருமதி. புனிதா மெயின்ராஜ்
திரு. அருளானந்தம் வெங்கடேசன்
திருமதி. லதா ஐசக் தனசிங்
திருமதி. மரியாள் குமாரவேல்
திருமதி. ஆல்பி இவாஞ்சலின் ஹாரிஸ்
திரு. பொன்னுசாமி S., திரு. டேவிட் S.
திரு. மோகன் R., திரு. தேபதத்தா லிமா

## சாந்தனா விடுதி, சாஹிப்கன்ஜ்:

**கய்தின்ஜின் வய்ஃபெய் & மெலடி டிம்சோன்டிங்**

**துதிக்க:** விடுதிப்பிள்ளைகள் மத்தியில் சுவிசேஷத்தைக் குறித்ததான திரைப்படங்களை 3 முறைகளும், பேச்சு ஆங்கில வகுப்பையும் நடத்த தேவன் உதவிபுரிந்தார். வேதாகம உண்மை சம்பவங்களையும், மிஷனெரிகளின் வாழ்க்கை சரிதைகளையும் நமது விடுதிப்பிள்ளைகள் விருப்பத்துடன் வாசித்து பயனடைகின்றனர். மாணவன் திலீப் கிஸ்கு குடற்புண் காய்ச்சலிலிருந்து சுகமடைந்தான். விடுதிக்கூரை சரி செய்யும்பணி இனிதே நிறைவேறியது; அப்பணியின்போது கூரையின் மேற்பகுதியிலிருந்து கீழே விழுந்த ஒரு நபரை தேவன் ஆபத்திற்கு விலக்கிப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதி ஊழியரின் குழந்தை பிறக்கும்போதே மரித்துப்போனதினால் கவலையில் மூழ்கியிருக்கும் அக்குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; உள்ளூர்வாசிகளின் மனமொத்த ஆதரவு நமது ஊழியத்திற்குக் கிடைக்க; நமது விடுதியிலிருந்து தங்களது படிப்பை நிறைவுசெய்து வெளியேறும் நமது மூத்த பிள்ளைகள் எங்குச் சென்றாலும் கர்த்தர் மீதுள்ள தங்களின் விசுவாசத்தை விட்டுவிடாமலிருக்க; நமது சாந்தனா விடுதி நிலப்பிரச்சனை விரைவில் நல்ல தீர்வுக்கு வர; அரசாங்கப் பொதுத்தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் லாரன்ஸ் டுடு, அனில் ஹெம்ரோம், அபிகா மராண்டி, திலீப் கிஸ்கு, தினேஷ் முர்மு, சாமுவேல் கிஸ்கு, ரூபன் மராண்டி, சல்பீத் ஹஸ்தா, பெஞ்சமின் முர்மு ஆகியோருக்கு தேவன் சிறந்த கல்வியறிவை அருள ஜெபிப்போம்.

## வனஞ்சால் பிராந்தியம்:

**பாகி சத்தீஷ் & முத்தா ரத்னகுமாரி**

**துதிக்க:** நமது தலைமைத்துவ பயிற்சி மையக்கட்டிடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டிட தேவன் உதவி செய்தார். புதிதாக 71 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 31 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். சிந்துரியா பணித்தள நமது மிஷனெரி பெஞ்சமின் ஜோதியை தேவன் கோவிட்-19னிலிருந்து சுகப்படுத்தியுள்ளார். மொகுல்பஹாரியா பகுதியில் அநேக புதிய தொடர்பாளர்களை தேவன் நமக்கு ஊழியத்தில் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்போதைய தொற்றுக்கால சூழ்நிலையில் வெளிசந்திப்பு ஊழியங்களை நமது சபை மூப்பர்கள் பொறுப்பெடுத்து நடத்த; இளம்பிராய மால் பஹாரியா விசுவாசிகளான சுரேஷ் தெகிரி, தினேஷ் தெகிரி, ஐசக் பஹாரியா, ரூபி தெகிரி, சந்தோஷ் தெகிரி ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

ஜூன் 16 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் சங்கர், திருமதி. சுசீலா விஜயகுமார்
திரு. பினித் பிரசாத் பர்தன்
திருமதி. பெனிட்டா ஜாண்சன்
திரு. எலியா சந்திரன்

## மேற்கு வங்காளம்

### மேக்லிகன்ஜ்:

**ஜென்னிஷ் & சுகந்தி புஷ்பம்**

**துதிக்க:** மாலைநேர ஜெபக்கூடுகைகள், இயேசு திரைப்பட ஊழியங்கள், சங்கிலித் தொடர் ஜெபம் ஆகியவைகளைத் தொடர்ந்து எந்தத் தடையுமின்றி நடத்த பரிசுத்தாவியானவர் அற்புதக் கிரியை செய்து வருகிறார். மேற்கு வங்க மிஷனெரிகளுக்காக நடத்திய உபவாச ஜெபக்கூட்டத்தை தேவன் நன்கு ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிகாரிபாடா, எல்பகி, சாங்ரா பந்தா ஆகிய கிராமங்களில் நடக்கப்போகும் ஊழியப் பின்தொடர்பணிகளின் ஆசீர்வாதங்களுக்காக; இயேசு திரைப்படத்தைக் கண்டிருப்போர் யாவரும் இரட்சிக்கப்பட; புதிய ஏற்பாட்டைப் பெற்றிருப்போர் அனைவரும் அதைக் கிரமமாக வாசிக்கவும், இயேசுவின் அன்பினால் கிருபையாகத் தொடப்பட்டு, ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் ஜெபிப்போம்.

### கங்காராம்பூர் : தீஹோ & சரணி

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ அனல் பரவியுள்ளது. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் நெருங்கியுள்ளனர். பாபூன்கெள கிராமத்தில் வைத்து நடைபெற்ற பெண்கள் முகாமை தேவன் பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். இப்பணித்தள சுதேச ஊழியரின் பணிமாற்றம் சமாதானமாய் நடந்தேறியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19னின் அறிகுறிகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது விசுவாசி தாலு முர்முவின் பூரண சுகத்திற்காக; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் பாலியோகோரா திருச்சபை மூப்பர் மனந்திரும்ப; இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கின்ற குடிப்பழக்கம், கள்ளப் போதனைகள், சமுதாய பயங்கள் யாவும் அகல; வேலைகளினிமித்தம் பிற மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றிருக்கும் நமது விசுவாசிகளின் சுகம் மற்றும் பாதுகாப்பிற்காக; நமது சுதேச ஊழியர்களான பத்ராஸ் முர்மு, சார்லஸ் மராண்டி மற்றும் தன்னார்வ ஊழியரான ஜெதா ஹெம்ரோம் யாவரும் ஊழியங்களைச் சிறப்பாகச் செய்ய ஜெபிப்போம்.

### *உபவாச ஜெபம், உத்தமரின் பணியில் உதவி செய்ய ஏவியது!*

*உத்தரப்பிரதேசம், கைம்கன்ஜ் பணித்தளம். கடந்த லெந்து காலத்தில், நமது விசுவாசிகள் உபவாசித்து ஜெபிக்க ஊக்கப்படுத்தப்பட்டார். அதன்படி அநேகர் உபவாசித்து, ஜெபத்துடன் உண்டியல் காணிக்கைகளை மிகுந்த தியாகத்துடன் சேமித்தனர். அதில் நமது இஜுரி கிராம புதிய வாலிபவயது விசுவாசி சகோதரி. சுக்தேவியும் 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்தார். அதன்பொருட்டு பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு, இன்று அவர் தனது கிராமத்தில் நடக்கும் சிறுவர் ஊழியத்தில் நமது ஊழியர்களுடன் சேர்ந்து உதவி செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை!*

## ஜூன் 17 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வின் செல்வராஜ்

திரு. ராஜதுரை N.

### இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசு வின் அன்பு பறைசாற்றப்பட்டுள்ளது. 3 நபர்கள் முதன்முறையாக இயேசுவின் அன்பை ருசிக்கத் தொடங்கியுள்ளனர். 3 இடங்களில் காண்பிக்கப்பட்ட இயேசு திரைப்பட நிகழ்ச்சியை ஏறத்தாழ 300 நபர்கள் காண தேவன் கிருபை செய்தார். வெலியாமுனி கிராமத்திலிருந்து ஒரு நபர் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளார். சொர்சாடுலி கிராம மத்யாஸ் டுடுவையும் சூரஜ்முனி சோரேனின் மகளையும் தேவன் வலிப்பு நோயிலிருந்து சுகப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொக்ரிகுட்டு திருச்சபை மூப்பர்களான சுனில் சோரேன், நீல் முனி ஹெம்ரோம், பிரபுஹாத் திருச்சபை மூப்பர்களான ராம் முர்மு, மெல்கோ சோரேன், ஹத்முச்சாரா ஆராதனை மைய சபை மூப்பர்களான சோமொய் ஹெம்ரோம், தால்ரு சோரேன், பசாகர் திருச்சபை மூப்பர்களான ராஜன் பஸ்கி, ஜுமுர் முர்மு, பன்பூல் திருச்சபை மூப்பரான பாபுல் முர்மு, பெல்ஹார் திருச்சபை மூப்பரான சானிபர் முர்மு ஆகியோர் சபை ஊழியங்களைச் சிறப்பாகச் செய்ய அவர்கள்மீது தேவ வல்லமை ஊற்றப்படவும், அநேகரை அவர்கள் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும்; ஆந்திரப்பிரதேசத்தில் தொலைந்துபோன பசாஹர் கிராம நமது விசுவாசி கிசான் முர்மு மீண்டும் தனது வீடு திரும்ப; உஜான்தர் கிராம புத்து ஹெம்ரோமைக் காசநோயிலிருந்து தேவன் சுகப்படுத்த; பப்லு முர்மு & சுனி மர்தி குடும்பம், ராம் ஹன்ஸ்தக் & சாமி முர்மு குடும்பம், ராஜு முர்மு & மோனிகா மர்தி குடும்பம், பிஸ்வநாத் ஹன்ஸ்தக் & மஞ்ஜிலி டுடு குடும்பம் ஆகியோர் குழந்தை செல்வங்களினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவி சேஷம் பரவியுள்ளது. 11 இடங்களில் நடந்த மாலைநேர ஜெபக்கூடுகைகளையும், 8 இடங்களில் பெருமளவு நடந்த வெளி சந்திப்பு ஊழியங்களையும் பலவிதங்களில் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். லக்கன் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவியது. டோலா கிராம ஜோயல் முர்முவைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். நமது ஊழியத்திற்கு இடையூறு விளைவித்து வந்த பாஜித்பூர் கிராம மங்கல் ஹெம்ரோமின் மனதை தேவன் ஊழியத்திற்குச் சாதகமாக மாற்றினார். பல்வேறு வியாதிகளிலிருந்து தேவன் சுந்தர் முர்முவையும் ரஜினா முர்முவையும் அற்புதமாகக் குணப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சபை ஆராதனைகளில் சபை மூப்பர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டு, தங்களது சபை மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த; நமது புதிய சுதேச ஊழியர்களைத் திருச்சபை மக்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள; ஜலால்பூர் கிராம ஹங்கல் ஹன்ஸ்தாவைத் தீராத சரீரவலியினின்று தேவன் சுகமாக்க; வரும்நாட்களில் நடக்கவுள்ள ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

ஜூன் 18 வெள்ளி

# அஸோம்

## லக்கிம்பூர்:

### C.H. ஜாண் & வேணி

**துதிக்க:** 17 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் அன்பு அறிவிக்கப்பட்டுள்ளது. 27 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கத் துவங்கியுள்ளனர். சௌகுரி கிராம விசுவாசிகளையும், பிச்சி பெகுவையும் தேவன் பல்வேறு வியாதிகளின் சங்கலிகளிலிருந்து விடுவித்தார். புட்டாய் மற்றும் நந்தலாலின் குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். இங்குள்ள பணித்தளங்கள் அனைத்திலும் சிறியளவிலான சுவிசேஷ ஊழியக்கூடுகைகள் மற்றும் ஜெபஐக்கியக் கூடுகைகள் யாவும் ஊக்கமாக நடைபெற்று வருகின்றன. மாஜூலி, கோலாபரி மற்றும் ஜோனை பணித்தளங்களிலுள்ள விசுவாசிகள் இணைந்து தாங்களாகவே தங்களுக்கென ஒரு ஆலயத்தைக் கட்டும் செலவுகளைப் பொறுப்பெடுத்து செய்து முடித்தனர். தியோரி சமுதாயத்தினரிடையே சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. நமது தன்னார்வ ஊழியர்களான ரஹிம் பட்டீர், பால் ஆகியோரின் குடும்பங்களிலிருந்து ஊழியத்திற்கு வரும் தடைகளை அவர்கள் மேற்கொண்டு ஊழியம் செய்ய தேவன் உதவியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகள் மற்றும் இத்தொற்றுநோயின் பரவல் சூழ்நிலைகளின் மத்தியில் நமது விசுவாசிகள் கிறிஸ்துவில் அதிகம் வளர; சமீபத்தில் தனது அன்பு மனைவியை இழந்து தவிக்கும் பிஜு சுங்ராங்கின் மனஆறுதலுக்காக; சுவிசேஷத்தை விருப்பத்துடன் கேட்கும் மாமுனி, திலீப் பெகு, பிப்பள் கும்பாங் மற்றும் நரகந்தோ ஆத்ம இரட்சிப்படைய; பாலிஜன், சிஜி, நோத் மாஜூலி, மிசின்பூர், பெக்கிலி, புரும்கான், பிஷாலா ஆகிய இடங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கண்ணீரின் சுவிசேஷ ஊழியம் என மிஸ்ஸிங் இனமக்கள் மத்தியில் செயல்படுத்த இருக்கும் திட்டம் ஆசீர்வதிக்கப்பட (Tearful Evangelism Among Mishing -TEAM 2 LAKHS) ஜெபிப்போம்.

## தேமாஜி:

### நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** மிஸ்ஸிங் இனமக்கள் வாழும் புதிய கிராமங்களைச் சுவிசேஷத்தினால் சந்திக்க தேவன் நமது ஊழியர்களுக்கு உதவி செய்தார். நமது வெளி ஊழியப் பிரயாணங்களுக்கு உதவியாக ஒரு நல்ல இருசக்கர வாகனத்தை தேவன் ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19னின் அதிகரிப்பு நிமித்தமாக தேமாஜி பகுதி மக்கள் சந்திக்கும் சவால்களில் தேவகரம் உடனிருக்க; இன்னும் மிஸ்ஸிங் இனமக்கள் வாழும் புதிய கிராமங்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல ஜெபிப்போம்.

ஜூன் 19 சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. செல்வின் ஜேசுதாஸ்

திருமதி. ஜோதி லக்ஷ்மி

# சத்தீஸ்கட்

## சீத்தாபூர்:

### பத்வி சோமாலியா மான்சுபாய் & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 2 கிராமங்களில் புதிதாக நடைபெற்ற பஜன் கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். தெதகா திருச்சபையினர் தங்களது திருச்சபையின் ஓராண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியதோடு, தங்களது அர்ப்பணிப்பையும் புதுப்பித்துக் கொண்டனர். நவபாரா பகுதியில் நடை பெற்ற நமது விசுவாசியின் திருமணத்தை தேவன் ஆசீர்வதித்து, அதை அநேகருக்குச் சாட்சியாக மாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தை அறிக்கையிடப் போகும் அஸ்காரா, லலித்பூர், நவபாரா ஆகிய பகுதி விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சத்தான்பாரா, ஹர்திசந்த் மற்றும் கேரா சாகர் பகுதி விசுவாசிகளின் திருமணங்களை தேவன் ஆசீர்வதித்துத் தர; நமது சபைமூப்பர்கள் வேதவசனங்களை நன்கு கற்றறிந்து, தங்களது சபைகளை நல்வழியில் நடத்திச் செல்ல; வயிற்று வீக்கத்திலிருந்து சகுந்தலாவும் புற்றுநோயிலிருந்து பத்கெரியும் சுகமடைய ஜெபிப்போம்.

## பையாதன்:

### தங்சிங்லியான் & உன்தியான்சிங்

**துதிக்க:** இப்பணித்தளத்தில் கோண்ட் இனமக்கள் மத்தியிலும் பிற இனமக்கள் மத்தியிலும் தேவன் திறந்தவாசலைத் தந்துள்ளார். கர்சாரி கிராம கௌரி சங்கர் என்ற நமது புதிய தொடர்பாளர் தேவவார்த்தையின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றார். நமது புதிய விசுவாசியான சாந்தாவும் அவரது மகளும் தங்களுக்கு அருகாமையில் வசிப்போர் மத்தியில் தேவநாம மகிமைக்கென நற்சாட்சி பெற்று வாழ்வதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை விருப்பத்துடன் கேட்டிருப்போர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; பஸ்கார் கிராம ஹரிலால் பகத்தின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; யாதவ், ராஜ்வதா மற்றும் பிற இனமக்கள் கூட்டங்களின் மத்தியிலும் நல்ல ஆவிக்குரிய மனமாற்றம் உண்டாக ஜெபிப்போம்.

## *கிறிஸ்தவ கொள்ளைக்காரி!*

*ராஜஸ்தான், ஸ்ரீ கங்காநகர் பணித்தளம். 4FF கிராமத்தைச் சார்ந்த நமது பெண் விசுவாசி அமன்தீப், பிற சமய நம்பிக்கைமீது பற்றுடைய மனிதருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். ஆயினும், தனது சாட்சியுள்ள உண்மை கிறிஸ்தவ ஜீவியத்தின் மூலம் தனது கணவரின் இதயத்தை இயேசுகிறிஸ்துவுக்கென கொள்ளையாடினார். தற்போது கணவரது இதயம் மட்டுமல்லாது, 2FD கிராமத்தில் வசிக்கும் தனது மாமனார், மாமியாரின் இதயங்களையும் தனது கிறிஸ்தவ சாட்சியுள்ள ஜீவியத்தின் மூலம் கொள்ளையாடிட தேவன் இவருக்குக் கிருபை செய்துள்ளார். தேவனுக்கே புகழுண்டாவதாக!*

## ஜூன் 20 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா ஜாய்ஸ் ஜாண்
திரு. கார்த்திகேயன் S.
திரு. விஜயகுமார் R.
திரு. பசவராஜா K., திரு. பூபதி P.
திரு. கிரிஷன் குமார்
திரு. லுஞ்ஜ்லால் சோங்தட்

### சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** பார்ஹதா மற்றும் கோர்பி பாமினின் கிராமங்களுக்குள் புதிதாகச் சுவிசேஷம் கடந்து சென்றுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். ராசோன்தா, போஹபாரா, அமோரா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். தேவன் நமது ஊழியர்களுக்கு சத்தீஸ்காரி மொழியைக் கற்றுக்கொள்வதற்கேற்ற மொழி ஞானத்தைத் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** செமரியா மற்றும் சோனி கிராமங்களின் ஆலய நிலங்கள் துரிதமாகப் பதிவு செய்யப்பட; காமரியா கிராம சாத்னமி இனமக்களின் இரட்சிப்பிற்காக; குழந்தை திருமணம், வரதட்சணை அமைப்பு, சாராயம் குடித்தல் போன்ற சமுதாயத் தீமைகளிலிருந்து மக்கள் முழுவதுமாக விடுபட; இப்பணித்தள ஊழியத்திற்கு 2 சுதேச ஊழியர்கள் கிடைக்க; நமது புதிய தொடர்பாளர்களான ரகுபீர், மோகன், அகதசியா, முகேஷ், அசோக், ராகேஷ், சஞ்சு, ரதி, பரதேசி, ராகுல் பஞ்ஜாரி, மகிதர் சன்வானி ஆகியோரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

### கர்கோடா:

### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** சமுதாய எதிர்ப்புகளையும் மீறி, நமது இரண்டு விசுவாசிகளின் குடும்பங்களில் அவர்களுடைய பிள்ளைகளின் திருமணங்கள் கிறிஸ்தவ முறையில் நடைபெற தேவன் உதவி செய்தார். தனது கணவர் கோவிட்-19னில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அக்கவலையின் மத்தியிலும் தேவன் நமது விசுவாசி ஹேமா குமாரிக்குச் சுகப்பிரசவத்தை ஈந்தார். சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்களைச் சந்திக்க அநேக தன்னார்வ ஊழியர்கள் நமது ஊழியத்தில் இணைய தேவன் அநுக்கிரகம் நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரத்தியா, சவ்கான், சாரதி, சாகு, சித்தார் ஆகிய இனமக்கள் மத்தியில் சுவிசேஷம் பரவ; சோடிகுடா கிராம நமது விசுவாசி முன்னுதாய் சித்தாரிக்குப் புதிதாகப் பிறந்துள்ள இரட்டை குழந்தைகளை தேவன் பாதுகாத்துத் தர; அஜித்கார் கிராம சம்பத் தர்தியாவை மனநோயிலிருந்து தேவன் சுகப்படுத்த; சாமிலி சித்தார், சிருமேனி சாகு, புஜ்ராம் சாகு, சிவபிரசாத் சாகு, கீதாபாய் சாகு, பாவோஜிராகி சாகு மற்றும் யமுனா சாகுவின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## ஜூன் 21 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கெத்சியா பால்ராஜ்
திரு. ஜாண் குமார்
திருமதி. சுவேரா மார்த்தாபெஹன் போடார்

### காட்கோரா:

**டிட்டிங்பௌ &**
**மலங்மெய் சனாலுங்**

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷ வாசனை பரவியுள்ளது. புதிதாக ஒரு நபர் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக விசுவாசிக்கத் தொடங்கியுள்ளார். ராகா கிராமத்தில் வேதாகம வகுப்புக்குழுவொன்று துவங்கப்பட்டுள்ளது. கார்தி கிராமத்தில் பீர்பால் & பிரீத்தியின் திருமணம் எவ்விதத் தடையுமின்றி கிறிஸ்தவ முறையில் நடைபெற்றது. பர்னுஜ் ஹரியா கிராமத்திலுள்ள நமது 9 விசுவாசிகளையும் தேவன் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்தார். பர்னுஜ் ஹரியா கிராம நமது விசுவாசி விஜய் குஜுர் காவல்துறை வேலைக்குத் தேர்வு பெற தேவன் செய்த உதவிக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பங்கேதா கிராம ஆலய ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கும் பஜ்ராங், பசந்த் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஜட்கா கிராம பிரமிளா உய்க்கைப் பொல்லாத ஆவிகளுக்குப் பயப்படும் பயத்திலிருந்து தேவன் விடுவிக்க; பய்சிமர் கிராம மான்சிங் & மது தம்பதியருக்கு மழலை பாக்கியம் அருளப்பட ஜெபிப்போம்.

### லக்கன்பூர்:

**அருண் குமார் & சாரதி**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. சமேரா கிராமத்தில் புதிதாக 14 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். டுடுகேசரா கிராம நமது விசுவாசிகள் கோவிட்-19னின் அறிகுறிகளினால் வியாதிப்பட்டபோதும், தேவன் அவர்களை அற்புதமாகப் பாதுகாத்து சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்சாபாரா கிராம நமது விசுவாசிகளான கிரண், ரவி மற்றும் நமது சுதேச ஊழியரின் வீட்டு உரிமையாளர் ஆகியோருக்குக் கோவிட்-19னிலிருந்து பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### லுடேக்:

**டேவிட் மசிஹ் & நிஷா**

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ தனல் மூட்டப்பட்டுள்ளது. புதிதாக 16 நபர்கள் கிறிஸ்துவின் மீது ஆழமான நம்பிக்கை வைக்கத் துவங்கியுள்ளனர். சில்பிரியுஸ், சுதன்திகா, அக்னு பக்லா ஆகியோரைத் தீராத வியாதிகளினின்று தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இத்தொற்றுநோயின் காலங்களில் பற்பல பெலவீனங்களினால் பாதிக்கப்பட்டு அல்லல்படும் கணேஷ், பிரணுசாய், துலர்சாய், பசந்தி, எலினா ரோஸ் ஆகியோர் முற்றிலுமாக அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

**ஜூன் 22 செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷண்முகம் R.S.

செல்வி. ஈவ்லின் பாக்கியா, திரு. மகேந்திரன் A.

## பாலி: ராபின்சன் ஹஸ்தக் & ஜான்சி

**துதிக்க:** ஊரடங்கினிமித்தமாக ஆராதனைகளை நிகழ்நிலை, அலைபேசி கூட்டிணைப்பு அழைப்பு மூலம் நடத்த தேவன் கிருபை பாராட்டுகிறார். சுகமில்லாதவர்களுக்கு அலைபேசியின் மூலம் ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, நமது விசுவாசிகளான கல்யாணி, தாமேஷ்வர், ஸ்வேதா, ராம்குமார், தரம் சாண்டு, ஈசாக், காஞ்சன்பாய், ஹித்தேஷ் ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊரடங்கினித்தம் விசுவாசிகளை நேரில் சந்திக்க இயலாததினால், அவர்கள் தங்களது விசுவாசத்தில் பின்னடைவு அடையாமலிருக்க; அலைபேசி கூட்டிணைப்பு மூலம் அனைத்து விசுவாசிகளும் ஜெப ஐக்கியத்தில் பங்குப்பெற; பல்வேறு சுகவீனங்களினால் துன்பப்படும் நமது விசுவாசிகளான பஸ்மத்பாய், சுனிதா, சந்திரிகா, சிவ பியாரியர் ஆகியோர் சுகமடைய; விசுவாசிகள் தங்களது சொந்த குடும்ப மக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் மத்தியில் தங்களது சாட்சியைக் கிறிஸ்துவுக்குள் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

## பிரதாப்பூர்: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உட்புக தேவன் உதவி பாராட்டினார். மற்றும் பிற அநேக கிராமங்களிலும் தேவன் திறந்தவாசலைச் சுவிசேஷத்திற்கென தந்துள்ளார். அங்கித் தோப்போ மற்றும் கிஷுபாயை தேவன் பற்பல நோய்களிலிருந்து சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்தேவையுள்ள புதிய இடங்களில் நமது சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; புதிய தொடர்பாளரான நீட்டா தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; கங்கோதரி, பாய்கோனா ஆகிய திருச்சபைகளுடைய மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாந்த்லால் சுகம் பெற; நமது பாய்கோனா திருச்சபை விசுவாசியொருவருக்கு நல்ல வாழ்க்கைதுணை அமைய ஜெபிப்போம்.

# ஒடிசா

## ராய்ரங்பூர்:

### சாமுவேல். J & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக 15 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கத் துவங்கியுள்ளனர். பிர்சா செளக் மற்றும் மாக்டி பகுதிகளில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களை தேவன் சிறப்பித்துத் தந்தார். தும்ரியா பகுதியில் புதிதாக ஒரு ஆராதனைக்குழு தொடங்க, அதில் 2 குடும்பங்கள் தவறாமல் கலந்து கொள்ள கர்த்தர் உதவி செய்கிறார். மூலப்பிரச்சனையிலிருந்து நமது விசுவாசி சம்பா நாயக்கை தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாத்ஜுடி, தங்கஜுடா, குப்புடி, தேவ்காம் ஆகிய கிராமங்களில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் இயேசு திரைப்பட ஊழியங்களின் ஆசீர்வாதங்களுக்காக; கோவிட்-19னால் மரித்த சலின் ககராயின் குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; தற்போதைய இத்தொற்றுகாலச்சூழ்நிலையில் விசுவாசிகள் மத்தியிலே உருவாக்கப்பட்டுள்ள சிறிய ஜெபக்குழுக்களை தேவன் அதிகம் பெலப்படுத்த; கடந்த 6 மாதங்களாக நடக்கவும் தூங்கவும் முடியாமல் அதிக பெலவீனத்தினால் கஷ்டப்படும் காளிதாசையும், சரீர வீக்கத்திலிருந்து ரேணு ஹெம்ரோமையும், இனந்தெரியாத நோயிலிருந்து பிக்ராம் முர்முவையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

ஜூன் 23 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அஜயகுமார் லிமா
திருமதி. மீனா கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன்
திருமதி. பிரபினா ராணி பிஸ்வோ ரஞ்சன்
திரு. ராமசாமி V. ஜெரோம்

# குஜராத்

## சூரத்: மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. இப்பணித் தளத்தின் ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. அலைபேசி கூட்டிணைப்பு அழைப்பு வசதியின் வாயிலாக ஜெபம் நடத்த தேவன் ஊழியர்களுக்கு அநுக்கிரகம் நல்குகிறார். இருபது அடி உயரத்திலிருந்து விழுந்து விட்ட நமது விசுவாசியின் மகன் சைலேஷ்பாயை தேவன் சேதமின்றிப் பாதுகாத்தார். தெருநாய்க்கடியின் காயங்களிலிருந்து கர்த்தர் நமது விசுவாசிகளான சுபாஷ்பாய் மற்றும் சச்சினைச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி சுகவீனமடையும் நமது விசுவாசிகளான மோஹிஷாபேன் மற்றும் சமீர்பாயை தேவன் பூரணமாகச் சுகமாக்க; குஷாலின் குடும்பப் பிரச்சனை நீங்கி, தேவசமாதானம் நிலவ; சூரத்தில் ஆலயம் கட்ட நில அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

## பாஜிபுரா:

### மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்

**துதிக்க:** விசுவாசிகளுக்கென மாலை நேர ஜெபக்கூடுகைகள் நடத்த தேவன் உதவிபுரிந்தார். நமது சுதேச ஊழியர் பிரகாஷ்பாயைக் குடற்புண் காய்ச்சலிலிருந்து தேவன் குணமாக்கினார். கடாத் மற்றும் வந்தேர்தேவி கிராமங்களில் நடைபெறும் நமது ஆராதனைகளுக்கு எல்லா மற்றும் கபிலா என்போரின் குடும்பங்கள் தவறாமல் வந்து கலந்து கொள்கின்றனர். நமது விசுவாசிகளில் பெரும்பாலானோர் தங்களது பால் பண்ணைகளின் மூலம் தங்களது வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்துக்கொள்ள தேவன் பாராட்டும் கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர், வாலிபர், பெண்கள் மத்தியில் ஊழியங்கள் தொடர்ச்சியாக நடைபெற; பயல், குந்தன், ஜிக்னேஷ் ஆகியோரைத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுவிக்க; வேதாகமக்கல்லூரியில் முறைப்படி கற்று, தனது கமித் இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாஞ்சிக்கும் யூசிஃப்பின் வாஞ்சையை தேவன் கனப்படுத்த ஜெபிப்போம்.

## தராம்பூர் & கெர்காம் விடுதி:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் பரவியுள்ளது. ஊரடங்கினிமித்தம் கெர்காம் விடுதிப்பிள்ளைகள் விடுதியை விட்டுப்போகும் வரை தேவன் அவர்களைக் கண்ணின் கருவிழிபோல் பாதுகாத்தார். மாதுரி கிராம ரமீலாபேனை நெஞ்சு வலியிலிருந்தும், குந்தியா கிராம பிரதீக்பாயைத் தீராத வியாதியிலிருந்தும் தேவன் அற்புதமாகக் குணப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊரடங்கினிமித்தமாகப் பொதுத்தேர்வு எழுதத் தடைபட்டிருக்கும் விடுதிப்பிள்ளைகளுக்காக; மனோஜ்பாய் & லீலாபேன் தம்பதியருக்கு மழலை பாக்கியம் கிடைக்க; தற்போது பெற்றோர்களோடு தங்கியிருக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் அனைவரின் பாதுகாப்பிற்காக; குந்தியா கிராம சோனியாபாயை நரம்புப் பிரச்சனையிலிருந்தும் மாருபாயைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

## ஜூன் 24 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால்ராஜ் ஆபிரகாம்
திருமதி. பிரத்யாசினி லிமா அஜயகுமார்
திருமதி. ரஸ்மித்தா ராணி ரவுட் ஹேமந்த

### நிஜர்:

**ஜசுபாய் மெக்குவான் & ஃபோபி பேஹன்**

**துதிக்க:** நமது வெளிசந்திப்பு ஊழியத்தின் மூலம் 150 நபர்களைச் சந்திக்க தேவன் கிருபை செய்தார். நமது ஆராதனைகளின் வாயிலாக அநேக விசுவாசிகளின் ஜெபம் கேட்கப்பட்டு, சரீர ஆன்மீக சுகங்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ள தேவன் பாராட்டுகிற அவருடைய அளவில்லாத கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான போதனைகளால் அடிக்கடி அலைக்கழிக்கப்படும் மூர்கன், கவன் சத்ரன், கோடோலா, அரோதித்தரா ஆகிய திருச்சபைகளின் மக்களுடைய விசுவாசம் ஸ்திரப்பட; பிரகாஷ் வசுரா, தினேஷ், அனில் வசாவா ஆகிய நமது சுதேச ஊழியர்கள் ஊழியங்களைச் சிறப்பாகச் செய்ய தேவஞானமும் வழிநடத்துதலும் கிடைக்க; விசுவாசிகள் தங்களது அனைத்து தேவைகளுக்கும் தேவனைச் சார்ந்து விசுவாசத்துடன் அவரைப் பற்றிக்கொள்ள ஜெபிப்போம்.

### மெஹசானா:

**சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி**

**துதிக்க:** பலவாசனா கிராம விக்ரம்பாயைத் தீய ஆவியின் பிடியிலிருந்து நமது ஆராதனைவேளையில் தேவன் விடுவித்தார். திருப்பதி மற்றும் குடிவா கிராமங்களில் நமது ஆராதனைகள் தடையின்றி நடந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளான ராஜுபாய், சிந்தி, ரீனாபேன், அபிஷேக் ஆகியோருக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; பலவாசனா பகுதி திருச்சபை மக்களின் எண்ணிக்கை பெருக; மெஹசானா பணித்தளத்திற்குள்ளும், அப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள பகுதி களிலும் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### கான்வேல்: வினு & சுகிமலர்

**துதிக்க:** முதன்முறையாக ஒரு கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் நடைபெற்றுள்ளது. புதிதாக 22 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். சின்ஜ்பாடா கிராமத்தில் மாலைநேர ஜெபக்கூடுகையையும், பட்ஜாய் மற்றும் செல்டி பகுதிகளில் பெண்கள் கூடுகை யையும் துவங்க தேவன் ஒத்தாசை புரிந்தார். மூட்காம் பகுதி ரமேஷ்பாயை மனவளர்ச்சியின்மையினின்று தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் அஜய் பாய், கோவிட்-19னால் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் தாஞ்சிபாய் மற்றும் பல பிற விசுவாசிகள் யாவரும் முழுவது மாகச் சுகமடைய; நமது விசுவாசி லாலிபேனுக்கு மழலை செல்வம் கிடைக்க; செல்டி கிராம நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

**ஜூன் 25 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெனிலா பொன்மலர் செலின்
திருமதி. பிரியா ஹெத்ஸி

# மகாராஷ்டிரா

## சிந்கேடா துணை - வடாலி:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** இங்கு ஆவிக்குரிய கூட்டங்களையும், சங்கிலித் தொடர் ஜெபத்தையும் தொடர்ச்சியாக நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். கோப்ரா பகுதியில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. உர்ஜாத் கிராம சந்திரகலாபாயைத் தீராத சரீரவலியினின்று தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இத்தொற்று நோய்ப்பரவல் காலச்சூழ்நிலையிலும் நமது புதிய ஆராதனைக்குழுக்கள் கர்த்தரில் தொய்வின்றி வளர; சளிக்காய்ச்சல் தொல்லையிலிருந்து ரீனா சாஜி நர்கிஸ் சுகம் பெற ஜெபிப்போம்.

## ஆலப்பள்ளி: நிங்தௌஜம்

**அலோன்சிங் & லியாம்பியாக்நெமி**

**துதிக்க:** புதிதாக 39 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. வித்தானியன் பகுதியில் 3 நாட்கள் வெளி சந்திப்பு ஊழியத்தைப் பெருமளவில் நடத்த தேவன் உதவி செய்தார். படுகபள்ளி கிராம நமது விசுவாசியொருவரைக் கோவிட்-19னி லிருந்தும், பத்மாதேவியை இரத்த அணு குறைவு கோளாறிலிருந்தும் தேவன் ஆச்சரியமாகச் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் அனைவரும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; தங்களது விசுவாசத்தைச் சபையில் அறிக்கையிடக் காத்திருக்கும் 11 நபர்களுக்காக; இத்தொற்றுநோய்க் காலங்களிலும் நமது ஊழியத்தை எவ்வித இடையூறுமின்றி நடத்த தேவன் கிருபை தர ஜெபிப்போம்.

## சுர்கானா:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** கருந்தாரி மற்றும் ஆம்ஜார் கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. உள்ளூர் சுதேச ஊழியர்கள் மற்றும் பெண்களுக்கான கூடுகைகளை தேவன் பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். போர்கவ் மற்றும் நக்சாவலில் கிராமங்களில் அநேகர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். கருந்தாரி கிராம காசிநாத்தின் குடும்பம், அம்பாடா கிராம லீலா வாக்மரேயின் குடும்பம், பொர்மால் கிராம கல்பனாபாயின் குடும்பம் யாவரும் வேதவசனத்தை மிகுந்த வாஞ்சையுடன் கேட்கின்றனர். தல்வாட் கிராம மோகன் பவார் வலிப்பு நோயிலிருந்து சுகம்பெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொர்மால் கிராம கல்யாண் பாயின் இல்லத்தில் வைத்து நடைபெறும் ஜெபஐக்கியம் தொடர்ந்து நடைபெற; பாரிபாடா கிராம மோகனின் குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ரசியா கிராமத்திலிருக்கும் ஒரேயொரு விசுவாசியின் மூலம் இன்னும் அநேகர் இயேசுவை விசுவாசிக்க தேவன் கிருபை செய்ய; ராகத் விஹர், சின்ஜ்பாடா, குக்கி ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஜூன் 26 சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. இம்மானுவேல் கார்த்தி

**டெக்கான்:**
**விஜயன் & ஜெபரோஸ்**

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். இத்தொற்று காலத்தில் வந்த காய்ச்சலிலிருந்து நமது மிஷனெரிகளையும், கோவிட்-19 லிருந்து அடிலாபாத் பணித்தள நமது விசுவாசிகளையும் தேவன் சுகமாக்கினார். எட்டப்பள்ளி, ஆலப்பள்ளி ஜிம்மலாகட்டா, கட்சந்தூர் ஆகிய பணித்தளங்களில் காய்ச்சல் அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கும் சூழலிலும் தேவன் நமது விசுவாசிகளைப் பாதுகாத்து வருகிறார். நமது சுதேச ஊழியர் மகேஷ் எமுல்வரின் திருமணத்தை தேவன் மிகச் சிறப்பாக நடத்தித் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வைரல் காய்ச்சலினால் கஷ்டப்படும் நமது ஊழியர் குல்தீப் சிங், நமது சுதேச ஊழியர் பாசுபர் மாதமியின் குடும்பம், உமாஜி குஷ்ராமின் குடும்பம் ஆகியவர்களை தேவன் முற்றிலுமாய்ச் சுகப்படுத்த; தொடர்ச்சியாக நடைபெறும் வேதாகம வகுப்புகளின் மூலம் நமது விசுவாசிகள் கர்த்தரில் அதிகம் வளர; சமுதாய விதிமுறைகளின் படி ஜெபஜக்கியங்களில் கூடும் நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; பள்ளிக்கூடமும் கல்விப்பயிற்சியும் இல்லாதபடி தங்கள் கிராமங்களில் தற்போது விடப்பட்டிருக்கும் நமது ஆலப்பள்ளி விடுதிச்சிறுவர்கள், கல்வியின் மீதுள்ள ஆர்வத்தையும் வாழ்விற்குத் தேவையான நல்லொழுக்கங்களையும் விட்டுவிடாமலிருக்க; பொதுத்தேர்விற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நமது 12-ம் வகுப்புப் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

## விநோதமான சப்தமாயினும் விந்தையேசுவைக் கண்டு கொண்டனர்!

*ஜார்க்கண்ட், மண்ட்ரோ பணித்தளம். நமது விசுவாசிகளல்லாத ரமேஷ் ஹெம்ரோம் மற்றும் அவரது மனைவி தளபிதி மூர்மு, ஒருமுறை அவர்களது தெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருந்தபோது, விநோதமான ஒரு சப்தத்தைக் கேட்டு, அதைப் பின்தொடரலாயினர். அதன் விளைவாக, தீய ஆவிகளின் பிடிகளில் சிக்குண்டு பைத்தியமாயினர். அவர்களது பிள்ளைகளும் வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து நின்றனர். எனவே, அவர்களுக்கு அருகாமையில் வசிப்போர் அனைத்து முறைகளிலும் அவர்களுக்குள்ளிருக்கும் தீய ஆவிகளை விரட்ட முற்பட்டும் பலனளிக்கவில்லை. கடைசியில், அவர்களை நமது ஊழியர்களிடம் ஜெபத்திற்கென கூட்டிக்கொண்டு வந்தனர். 3 மணிநேர இடைவிடாத ஜெபத்திற்குப்பின், அவர்கள் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட்டுச் சுகமாகி, தற்போது அவர்களது கிராம மக்களுடன் சேர்ந்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, தொடர்ச்சியாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். அல்லேலூயா!*

**ஜூன் 27 ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சார்லெட் ஜெசிந்தா செல்வின்
திருமதி. வில்லி ராணி வின்செண்ட் பிரேம்ராஜ்
திருமதி. லுன்சிங் N.

## கர்நாடகா

### கோலார், தென் மண்டலம்:

**ஜெபராஜ் சாமுவேல் &**
**ஜெய சௌந்தரி**

**துதிக்க:** நமது விசுவாசிகள் தங்களுக்குள்ளாகவே நல்ல ஜெப வலைப்பின்னலை ஏற்படுத்திக் கொள்ள தேவன் கிருபை செய்துள்ளார். அருகாமையிலிலுள்ள மாநிலங்களில், பட்டணங்களில் கொரோனா தொற்று அதிகமாகப் பரவிவரும் இக்காலக்கட்டத்திலும் தேவன் நமது மிஷனெரிகள் மற்றும் அவர்களது குடும்பங்களை இம்மட்டும் பாதுகாத்து வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீடுகளில் நடத்திவரும் ஆராதனைகளுக்குக் கர்நாடகாவில் கடுமையாக நிலவிவரும் எதிர்ப்புகள் மறைய; தடுத்து நிறுத்தி, நமது தன்னார்வ ஊழியரை ஊழியம் செய்யக்கூடாதென மிரட்டிச் சென்றிருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர் கூட்டம் மனம் மாற; தங்களது தாயாரை இழந்து பரிதவிக்கும் நமது மிஷனெரிகளான திருமதி. சுசிலா விஜயகுமார் மற்றும் திரு. தெபதத்தா லிமா ஆகியோருடைய மனஆறுதலுக்காக; சபை நிகழ்ச்சிகளிலும், ஊழியங்களிலும் தலைமைத்துவப் பொறுப்பில் ஈடுபடும் நமது சபை மூப்பர்களுக்காக; வேதாகம வகுப்புக்குழுக்களில் நமது விசுவாசிகள் உற்சாகமாக ஈடுபட; புதிய பணித்தளங்களுக்குப் படையெடுத்துச் செல்லும் நமது சுதேச ஊழியர்கள் மற்றும் நமது மிஷனெரிகளின் முயற்சிகளில் தேவகரம் அவர்களோடிருக்க; ஒடார், பஞ்ஜாரா, குருபார், மலா, மதிகா, சித்தி, நாயுடு மற்றும் ரெட்டி ஆகிய இனமக்கள் அதிகமான எண்ணிக்கையில் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்ட; நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுடைய பிள்ளைகளின் கடந்த இருவருட கல்வி நிலையின் அவலங்கள் மாறி, சுபீட்சமான வாழ்வு யாவருக்கும் மலர ஜெபிப்போம்.

## *மந்திரவாதி நாடும் மகா பெரிய வைத்தியர்!*

*குஜராத், போடேலி பணித்தளம். கந்திவாலி கிராமத்தில் மந்திரத்திற்குப் பெயர் பெற்றவர், ஈஸ்வர்பாய். இருவருடங்களுக்கு முன்பு இவரது மகன் சந்தீப்பிற்கு குதிங்காலில் ஒரு அறுவை சிகிட்சை செய்யப்பட்டது. இருப்பினும், இருவருடங்களாகியும் அந்தப் புண் ஆறி குணமாகவே இல்லை. இலட்சம் இலட்சமாகப் பணம் செலவழித்தும், அனைத்து மத மாந்திரீக வழிபாட்டு முறைகளைச் செய்து பார்த்தும் பயனேதுமில்லை. தற்போது ஈஸ்வர்பாய் தனது மாந்திரீகத்தின் மீது நம்பிக்கையற்றவராய், நமது ஆராதனை மற்றும் ஜெபக்கூடுகையில் கலந்து கொண்டு, மகா பெரிய வைத்தியரான இயேசு நிச்சயம் தன் மகனுக்குப் பூரண சுகமளிப்பார் என்று விசுவாசத்துடன் நாடி நிற்கின்றார். இவருடைய விசுவாசத்தை தேவன் கனப்படுத்தி, இவரது மகனுக்குச் சுகமளிப்பதின் மூலம் வரும்நாட்களில் இப்பகுதியில் இவர் இயேசுவுக்காகப் பலத்த சாட்சியாக மாறுவார் என்பதில் சந்தேகமேதுமில்லை. எனவே, நாமும் ஜெபத்துடன் இவர்களது இரட்சிப்பில் பங்கடைய தேவன் நமக்குக் கிருபை செய்வாராக!*

## ஜூன் 28 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் ராஜாசிங்

திருமதி. செல்வி தெய்வநாயகம்

### ஹூப்ளி பிராந்தியம்:

**சுனில் தத்தகாரா & மீனாக்கி**

**துதிக்க:** புதிதாக 30 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. கஜேந்திர கடா பணித்தள நமது விசுவாசிகளான பூஜா மற்றும் வனிதாவிற்கு ICICI வங்கியில் சிறப்பான வேலைகள் கிடைத்துள்ளன. முந்தர்கி பணித்தள நமது விசுவாசி பசவராஜின் ஆட்டைத் திருடிச் சென்ற மனிதரும் அவரது குடும்பமும், பசவராஜ் இந்தத் திருடு குறித்து காவல் துறையில் புகார் அளிக்காததினால், பிற்காலத்தில் இயேசுவின் அன்பை அவர்களும் ருசித்துள்ளனர். முந்தர்கி பணித்தளத்தில் ஒரு புதிய திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளது. பசவனபாகிபாடி கிராம நமது விசுவாசி லட்சுமி ஜெபத்திற்கென வீட்டை விட்டுப் புறப்பட்டவர், காணாமல் போய் 3 நாட்களுக்குப்பின் மீண்டும் தனது வீட்டிற்குப் பத்திரமாகத் திரும்பியுள்ளார். நமது சுவிசேஷத்தை முந்தைய நாட்களில் எதிர்த்து வந்த நமது இந்திய ராணுவ வீரர் பாபு லாமனி, தற்போது சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முண்டகாட் பணித்தளத்தில் தனது மனைவியை இழந்து தவிக்கும் நமது விசுவாசி இரப்பா மற்றும் தாயை இழந்திருக்கும் அவருடைய பிள்ளைகள் யாவருக்கும் மனஆறுதல் கிடைக்க; ஷிகோன் பணித்தள சசிகலாவின் கணவரது இரட்சிப்பிற்காக; தன் தாயை ஆராதனைக்கு வரவிடாமல் தடுக்கும் ஷிகோன் பணித்தள நமது விசுவாசி ரத்தனாவின் மகன் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட; ஷிகோன் பணித்தளத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசி சன்னப்பாவின் குடும்பம் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சமீபத்தில் முண்டர்கி பணித்தள முருகனை மரணத்தின் மூலம் பிரிந்து தவிக்கும் அவரது குடும்ப மக்களின் மனங்களை தேவன் ஆறுதல்படுத்த; கஜேந்திரகடா பணித்தள வெர்பதரா மற்றும் முனிஷ் தங்களது குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்று, தேவ இரட்சிப்பைப் பெற்றிட ஜெபிப்போம்.

### ஷிக்காவ்: சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கத் துவங்கியுள்ளனர். சாவ்னூர் பகுதியில் புதிதாக 7 நபர்கள் நமது ஆலய ஆராதனைகளில் வந்து கலந்து கொள்கின்றனர். சாவ்னூர் திருச்சபையில் முதன்முறையாக நமது இரு விசுவாசிகள் சுரேஷ் மற்றும் பசவராஜின் திருமணங்கள் நடைபெற்றன. தலாஸ் கிராம சாவித்ரி தொடர்ந்து நமது ஜெபக்கூடுகைக்கு வந்ததின்மூலம் அவருக்குத் தீராத தலைவலியிலிருந்து தேவன் விடுதலை தந்தார். கோவிட்-19னின் தொற்றிலிருந்து காந்தாவின் குடும்பத்தை தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 வருடங்களாக நடக்க முடியாமல் அவதிப்படும் பிரதீப்பின் சுகத்திற்காக; நமது விசுவாசி இரப்பாவின் கடன்பிரச்சனை தீர; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசி சன்னப்பா மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நமது விசுவாசி முத்தக்காவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

ஜூன் 29 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபதங்கம் மாதவராய்
திரு. வடேகர் திலிப்பாய் ரங்குபாய்
திருமதி. சோனியா ராணி ஜெனா
திரு. மின்ட்டு குட்டும், திரு. பால்ராஜ் P.
திருமதி. மன்னா சிங்

## கஜேந்திரகடா:

### மஞ்யா நாயக் & ரத்னா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ தென்றல் வீசியுள்ளது. இல்காள் திருச் சபையினரின் மத்தியில் தேவசமாதானம் நிரம்பியுள்ளது. பீமாபாயைப் பெலவீனங்களிலிருந்தும், லக்ஷ்மிபாயைக் கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கும் வீர் பத்ரா மற்றும் மௌனிஷின் இரட்சிப்பிற்காக; பாபுவை வயிற்றுப் பிரச்சனையிலிருந்தும், சுனிதாவை மூலப்பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசி அக்ஷதாவிற்கு நல்ல வாழ்க்கைதுணையமைய ஜெபிப்போம்.

## ஷிறஹட்டி:

### ஆஷாபிரப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் பரவியுள்ளது. குடிப்பழக்கத்திலிருந்து ஜமிலாவை தேவன் விடுவித்தார். லக்ஷ்மியைப் பல் பிரச்சனையிலிருந்தும், பசவராஜைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் கர்த்தர் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத வயிற்றுவலியிலிருந்து மல்லப்பாவையும், குடிப்பழக்கத்திலிருந்து ஹனுமந்தப்பாவையும் கர்த்தர் குணப்படுத்த; நமது புதிய தொடர்பாளர் மனுலாவிற்கு மழலை செல்வம் கிடைக்கவும், ராமசாமி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவும்; நமது விசுவாசி நஜினாவிற்கு அங்கன்வாடியில் நல்ல வேலையொன்று கிடைக்க ஜெபிப்போம்.

# தெலங்கானா

## அசிஃபாபாத்:

### வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்

**துதிக்க:** சூளகுடா மற்றும் டோங்கர்கூன் கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளனர். கொடிய விஷக் காய்ச்சலிலிருந்து அபிகாய், சிந்து, மகிமா ஆகியோருக்கு தேவன் சுகம் தந்தார். பொட்டகுடா, துபாகுடா, நார்கூன் மற்றும் துலானா பகுதிகளிலுள்ள நமது சபை மூப்பர்கள் யாவரும் தங்களது சபை ஆராதனைகளை எடுத்து நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்திகுடா கிராமத்தில் வசிக்கும் பர்தி இனமக்களின் இரட்சிப்பிற்காக; லக்ஷ்மன் மற்றும் துர்பதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; சுஜாதா பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; இரத்தசோகை பிரச்சனையிலிருந்து லக்ஷ்மியும், தீக்ஷாவும் சுகமடைய; சமுதாயத் தீமை வளையத்திலிருந்து கோண்ட் இனமக்கள் காப்பாற்றப்பட ஜெபிப்போம்.

**ஜூன் 30 புதன்**

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அசரியா ராஜ்குமார், திரு. வெங்கடேசன் C.
திரு. விக்னேஷ்வரன் N., திரு. ஷிஷு பால்

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி

**துதிக்க:** புதிதாக ஜங்கல்லாபள்ளி மற்றும் P. ரெட்டிபள்ளி கிராமங்களில் இயேசுவைக் குறித்த நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மோரவபள்ளி, நாராயணரெட்டிபள்ளி, கோலாபள்ளி ஆகிய கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, அதன் மூலம் 70 பேருக்குச் சுவிசேஷம் சென்றடைய உதவி செய்துள்ளார். V. கோதூர் கிராம யாகய்யா குடும்பம், கோவிந்தரெட்டிபள்ளி கிராம சுஜாதா குடும்பம், மதுபாபு மற்றும் கவிதா குடும்பம், சிரஞ்ஜீவி, நாகார்ஜுன் ஆகியோர் சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டு ஏற்றுக்கொண்டிருக்கும் பாலாஜி, கல்பனா, யாகய்யா, பிரசாத், முனிம்மா மற்றும் வெங்கடராமையா குடும்பம் தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தைத் திருச்சபையில் தைரியமாக அறிக்கையிட; Y S கேட் பகுதியைச் சேர்ந்த பெத்தபாப் பம்மாவின் மறைவினால் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் அவரது குடும்ப மக்களின் மனஆறுதலுக்காகவும், அவர்களது ஆத்ம இரட்சிப்பிற்காகவும்; பில்லி குண்டலப்பள்ளி கிராம நமது புதிய தொடர்பாளர் ஜோதிக்குச் சுகப்பிரசவம் நேரிட; மது & கவிதா குடும்பம், யாகய்யா குடும்பம், சிரஞ்சீவி, நாகராஜ் ஆகியோர் நமது ஆராதனையில் ஒழுங்காகக் கலந்து கொள்ள; கட்டகிந்தபள்ளி கிராம நமது புதிய தொடர்பாளர் பிரசாத் சிறுநீரகக் கோளாறிலிருந்து பூரண குணமடைய ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## கெலமங்கலம்:

### பாலசுப்ரமணியன் & பரஞ்ஜோதி லூசினா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. நமது புதிய தொடர்பாளர் கங்கப்பா நமது ஆராதனையில் தொடர்ச்சியாகப் பங்குப் பெறுகிறார். சல்பாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. நமது விசுவாசி ஐசக்கின் கடன்பிரச்சனை தீர்ந்தது. திம்மர்யானைச் சிறுநீரகப்பிரச்சனையிலிருந்தும், முத்து, பசம்மா, பவித்ரா ஆகியோரை எலும்பு முறிவுகளிலிருந்தும், மாதப்பாவை மனக்கோளாறிலிருந்தும் தேவன் குணமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகளான சாமுவேல் மற்றும் வெங்கடேஷ் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ரேவதிக்குச் சுகப்பிரசவம் நிகழ; கண்பார்வை கோளாறிலிருந்து சின்ன தம்பி குணமாக; நமது விசுவாசிகளுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் கிடைக்க; நமது விசுவாசிகளான சண்முகம், ரவி, பிரகாஷ் ஆகியோரின் கடன்பிரச்சனைகள் தீர ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

# நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***